விலே சதம் 50

பக்கங்கள் — 8

★ ★

# ஈழநாடு

## வார மலர்

* THE EELANADU VARAMALAR *

மலர் 20 | ஐப்பசி 26 | ஜுல்ஹஜ் 10 | ஞாயிற்றுக்கிழமை | (12—11—78) | இதழ் 272



சகலவித பல் வியாதிகளேயும் போக்கவல்லது

அண்ணு பற்பொடி

இலங்கையின் எப்பாகத்திலும் கிடைக்கும்.

கூடுதலாக அண்ணு பற்பொடியை வாங்கும் வியாபாரிகளுக்கு விசேடகழிவுண்டு

அண்ணு தொழிலகம்

இணுவில்

தொலேபேசி: 7412



"நீம் சுகாதார தூபம்"

வேம்பினின்றும் நவீன முறையில் தயாரிக்கப்பட்ட

நீம் சுகாதார தூபம்

வீட்டிலுள்ள நுளம்பு, இலேயான், பூச்சி, புழு ஆகியவற்றை நீக்கி நறுமணம் கமழச்செய்கின்றது.

விலே 25 சதம் மட்டுமே!

மில்க்வைற்

யாழ்ப்பாணம்


## பனம்பொருள் காரியாலய திறப்புவிழா

# "வடபகுதி எம். பி. க்களின் கோரிக்கை நிறைவேறுகிறது"

## தோட்டத் தொழில் அமைச்சர் மகிழ்ச்சி

## மத்திய கிழக்குக்கு பனம் பொருள்

**பனம் பொருள் அபிவிருத்திச் சபை அமைக்குமாறு வட பகுதி எம். பி.க்கள் தொடர்ந்து கோரிக்கைவிடுத்துவந்தனர். அதனல் கடந்த வரவு செலவுத் திட்டத்தின்போது பனம்பொருள் அபிவிருத்திச் சபை நிறுவப்படும் என்று கூறினேம். இன்று அது நிறைவேற்றுப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாணத்தில் பனம் பொருள் அபிவிருத்திச் சபைத் தலைமைக் காரியாலயத்தைத் திறந்து வைத்துப் பேசிய தோட்டத் தொழில் அமைச்சர் திரு. எம். டி. எச். ஜெயவர்த்தன மேற்கண்டவாறு கூறினர்.

வை. எம். சி, ஏ. சந்தியிலிருந்து அமைச்சர் ஜெயவர்த்தன மேளவாத்தியத்துடன் ஊர்வலமாக தேசிய வீடமைப்புக் கட்டிடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அமைச்சருடன் பனம்பொருள் அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. கே. சி. நித்தியானந்தா, முகாமை இயக்குநர் திரு. என். கனகசூரியர் ஆகியோரும் அழைத்துச்செல்லப்பட்டனர்.

அமைச்சர் வந்து இறங்கியதும் திரு. கே. சி. நித்தியானந்தா முதலில் மாலே சூட்டி வரவேற்ருர். அதனைத் தொடர்ந்து வீதியின் இருமருங்கிலும், அணிவகுத்து நின்ற இளைஞர்கள் மாலே சூட்டினுர்கள் அமைச்சரின் கண்களை மாலேகள் மறைத்ததும் திரு. நித்தியானந்தா மாலேகளைக் கழற்றி காரில் வைத்தார்.

ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்ட அமைச்சர் நேராக தேசிய வீடமைப்புத் திணைக்கள மேல்மாடியிலுள்ள பனம்பொருள் அபிவிருத்திச் சபைத் தலைமைக் காரியாலயத்தைத் திறந்து வைத்தார். அங்கு வைக்கப்பட்டிருந்த பனம்பொருள் பண்டங்களை அமைச்சர் பார்வையிட்டார்.

காலே 9 மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்ட திறப்புவிழா 10-30 மணிக்கே ஆரம்பமாகி 12-15 மணிக்கு முடிவடைந்தது. 11-15 மணிக்கு அரசாங்கச் செயலகத்தில் ஆரம்பமாகவிருந்த மாநாட்டிற்கு வந்த யாழ்'

(8ம் பக்கம் பார்க்க)

(யாழ்ப்பாணம்)

பனம்பொருள் பண்டங்கள் ... மூன்றுமாத காலத்துக்குள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும்.

இத்தகவலே தோட்டக் கைத்தொழில் அமைச்சர் திரு. எம். டி. எச். ஜயவர்த்தன நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பனம்பொருள் அபிவிருத்திச் சபைத்தலைமைக் காரியாலயத் திறப்புவிழாவில் கூறினர்.

அடுத்த ஆண்டு ஜனவரி ... அபிவிருத்திச் சபையின் ஆதரவில் அகில இலங்கை ரீதியிலான பனம்பொருள் கண்காட்சியொன்று யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படவுள்ளது என்றும் தாமே அக்கண்காட்சியைத் திறந்துவைப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (கெ-இ)

## 'அமிர்' இன்று வருகிறர்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அமிர்தலிங்கம் தமது 69 நாள் வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு இன்று காலே நாடு திரும்புகின்ருர்.

காலே 10-20 மணிக்கு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடையும் அமிர் தம்பதிகளை கூட்டணிப்

(8-ம் பக்கம் பார்க்க)

## வடபகுதி எம். பி. க்களிடம் அமைச்சர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பனம்பொருள் அபிவிருத்திச் சபை வளர்ச்சிக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும், பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் பனம் பொருள் ஆராய்ச்சி நிலையத்திற்கு பணம் ஒதுக்குமாறும் யாழ். அரசாங்க செயலகத்தில் நடந்த மாநாட்டில் அமைச்சர் எம். டி. எச். ஜயவர்த்தன யாழ் மாவட்ட எம். பிக்களைக் கேட்டுக்கொண்டார்.

நேற்று நண்பகல் அமைச்சர் ஜயவர்த்தன தலைமையில் நடந்த இம்மாநாட்டில், பதில் எதிர்க்கட்சித் தலைவர் திரு எம் சிவசிதம்பரம், சாவகச்சேரி எம் பி. திரு வி. என். நவரத்தினம் பருத்தித்துறை எம் பி. திரு, கே. துரைரத்தினம், கோப்பாய் எம். பி திரு. எஸ். சதிரவேலுப்பிள்ளை, யாழ்ப்பாணம் எம் பி திரு வி யோகேஸ்வரன், கிளிநொச்சி எம். பி. திரு வி, ஆனந்தசங்கரி, வட்டுக்கோட்டை எம. பி திரு. ரி திருநாவுக்கரசு, மானிப்பாய் எம். பி. திரு வி. தர்மலிங்கம். திரு கே. சி. நித்தியானந்தா. அரசாங்க அதிபர் திரு லயனல் பெர்னண்டோ, அமைச்சு உதவி செயலாளர் திரு புஞ்சி தேவா, மற்றும் இலாகா உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்

பதில் எதிர்க்கட்சித்தலைவர் திரு. எம். சிவசிதம்பரம்

[8-ம் பக்கம் பார்க்க]

## நித்தியானந்தா ஆரத்தழுவி அமைச்சரை வரவேற்ருர்

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலே ரயில்மூலம் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த பெருந்தோட்டத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எம். டி எச். ஜயவர்த்தனவுக்கு யாழ் ரயில் நிலையத்தில் குதூகலமான வரவேற்பளிக்கப்பட்டது.

ரயில்நிலையத்திற்கு தம்மை வரவேற்க வருகைதந்திருந்த உயர் அதிகாரிகள், பொதுப் பிரமுகர்கள், ஐ. தே. க. ஆதரவாளர்கள் அனைவருக்கும் அமைச்சர் புன்முறுவலுடன் தமது பகாலே வணக்கத்தைக்கூறி நன்றி தெரிவித்துக் கொண்டார்.

பனம்பொருள் அபிவிருத்திச் சபைத்தலைவர் திரு கே.சி நித்தியானந்தா முதலில் அமைச்சரை ஆரத்தழுவி மாலே அணிவித்து வரவேற்ருர் பனம் பொருள் அபிவிருத்திச் சபை நிர்வாக சபை உறுப்பினர் திரு. ஏ. என். கனகசூரியர், ஐ தே க பிரமுகர் திரு எஸ். கணேசலிங்கம், அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ணண்டோ. தேசிய இளைஞர் கவுன்சில் பிரமுகர்கள் உயர் அதிகாரிகளுட்பட பலர் மாலே அணிவித்தனர்.

எளிய உடையில் காட்சி தந்த அமைச்சர் எல்லோருடனும் அளவளாவினர் வரவேற்பு வைபவத்தில் கூட்டணி எம் பிக்கள் எவரும் கலந்து கொள்ளவில்லே. (கெ)

## மிளகாய்க்கு உத்தரவாத விலே?

### பாராளுமன்றத்தில் விஎன் கோரிக்கை

(கொழும்பு)

இந்நாட்டுக்குத் தேவையான மிளகாயில் மூன்றில் ஒரு பகுதி வட பகுதியிலேயே உற்பத்திசெய்யப்பட்டு வந்தது. இந்நிலேயில் மிளகாய்க்கு அரசு உத்தரவாத விலே நிர்ணயம் செய்யாததினுல் வட பகுதியிலுள்ள விவசாயிகள் இப்போது மிளகாய்ச் செய்கையில் ஈடுபடுவதில்லே இதன் காரணமாக வேலேயில்லாத்திண்டாட்டம் அதிகரித்து வருவதுடன் பொருளாதார நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது

இவ்வாறு சாவகச்சேரி எம் பி. திரு வி என் நவரத்தினம்நேற்றுமுன் தினம் பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினுர்.

மிளகாய்க்கு உத்தரவாத விலே ஒன்றை நிர்ணயிப்பதன் மூலம் மிளகாய் உற்பத்தியை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் திரு நவரத்தினம் கேட்டுக்கொண்டார். (க:இ)


ஹஜ் வாழ்த்துக்கள்

வாசகர்கள், வாடிக்கையாளர்கள். வர்த்தகப் பெருமக்கள். விளம்பரதாரர்கள் அனைவருக்கும் எமது இனிய ஹஜ் நல்வாழ்த்துக்கள்!

# வேலைவாய்ப்புக்களை அதிகரிக்க இவர் கூறும் யோசனை

## ஈ-நோர் வலைஉற்பத்தித்தொழிற்சாலை பொறுப்பாளர் க. சரவணமுத்துவுடன் ஒரு சந்திப்பு

சந்தித்தவர்:

**க. அருளானந்தன்**

"எமது தேசத்தில் பெரும் சிக்கலானதாவும் உடனடியாகத் தீர்க்கப்படவேண்டிய அடிப்படை வாழ்க்கைப் பிரச்சினையாக வேலையின்மைத் திண்டாட்டம் விளங்குகின்றது இதனைத் தீர்ப்பதற்கு நாட்டில் இன்று தொழில வளர்ச்சியைநாடிநிற்கின்றோம். இதற்சாக கைத்தொழில், விவசாய, வர்த்தக தொழில்களை அபிவிருத்தி செய்வதில் முன்னணி வகிக்கிறோம்.

ஆற்றலுள்ள இன்றைய இளைஞர்களின் உழைப்பாற்றல் சக்தியும் (மனிதவளம்) வளம் படுத்தப்படாது வீணாக்கப்படுகின்றது இதனால் படித்தவர்களும், படிக்காதவர்களும், வேலைத்திறன் உடையோரும், இல்லாதோரும் ஏதோ வாழ்க்கைக்கு வருமானம் தேடியும், தொழில்வாய்ப்பைத் தேடியும் நாளுக்குநாள் இலங்கையைவிட்டு வெளியேறுவது அதிகரித்து வருகின்றது.

எமது நாட்டில் தொழில் [illegible]யாக வளர்ச்சியடைந்த நாடுகளில்தொழில் கூலி (Labour Cost) அதிகரித்து காணப்படும் தொழில்களைப் பெற்று எமது நாட்டு உழைப்புச் சக்தியைக் கொண்டு இத்தொழில்களை செய்வதன் மூலம் இலங்கையில் வேலைவாய்ப்பினையும், (Labour Woges) தொழிலுக்கான அதிக சம்பளத்தையும் பெற்றுக் கொள்ளமுடியு.''

இவ்வாறு சுழிபுரத்தைச் சேர்ந்தவரும் ஈ-நோர் வலையுற்பத்தி யாழ்ப்பாணத் தொழிற்சாலைப் பொறுப்பாளருமான பொறியியலாளர் திரு. சரவணமுத்து வேலையின்மைப் பிரச்சினையை உடனடியாத் தீர்ப்பதற்கு எது மார்க்க மெனக்கேட்டபோது கூறினார்.

திரு க சரவணமுத்து தமது ஆரம்பக் கல்வியை மலாபாவில் தொடங்கிப் பின் இலங்கையில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில்கற்று, லண்டன் சென்று லண்டன் இயந்திரப் பொறியியல் கல்லூரியில் நான்கு வருடம் கற்று பொறியியல் துறைப்பட்டதாரியானார் யோக்சயரிலுள்ள உருக்குத் தொழிற்சாலையில் ஐந்து வருடம் தொழிலனுபவம் பெற்றவர் இவர். பின் இலங்கைக்கு வந்து பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில 10 ஆண்டுகள் பொறியியளாளராகக் கடமை புரிந்து1976 முதல் ஈ-நோர் யாழ்ப்பாணவலையுற்பத்தித் தொழிற்சாலையின் பொறுப்பாளராக விளங்குகின்றார்.

மேலும் அவர் கூறுவதாவது "ஐரோப்பாவில் அதிகமாகப் பயன் படுத்த படும் நீள் தூண்டில் முறைக்கு வேண்டிய தொழிலை எமது தொழிற்சாலையில் நோர்வே நாட்டு தனிவர்த்தகர் ஒருவருக்காக மேற கொண்டுள்ளோம் நான மூன்று மாதங்கள் எமது நிறுவனத்தின் சார்பில் உயர் வேலையனுபவம் பெறுவதற்காக ஜப்பான் கொரியா ஆகிய நாடுகளுக்குச் சென்றபோது: அந்நாடுகளை இத்தகைய தொழில் முறையை இயந்திர உற்பத்தி ஆலைகளிலும், வலையுற்பத்தி ஆலைகளிலும் காணக்கூடியதாக இருந்தது. சிறு இயந்திரங்களின் உதவியோடு அதிக உழைப்புச் சக்தியை இத்தகைய தொழில்களில் ஈடுபடுத்தி வேலைவாய்ப்பையேற்படுத்தலாம் இதற்கு வெளிநாடுகளில் வாழும் எமது நாட்டைச் சேர்ந்தவர்கள் அந்நாடுகளில் வாழும் எமது நாட்டைச்சேர்ந்தவர்கள் அந்நாடுகளில் காணப்படும் அதிக தொழில்கூலி உள்ள தொழில்களை இலங்கைக்குப் பெற்றுத் தருவதற்கு முன்வர வேண்டும்'' என்றார்.

"இலங்கையின் மீன்பிடி அபிவிருத்திபற்றி பல ட்டங்கள் வகுக்கப்படுகின்றன, அவை செயல்படுத்தப்படுகின்றன. ஆனல் வெற்றி அளிக்கவில்லை இதுபற்றி உங்கள் கருத்து என்ன? என்று நான் கேட்டபோது அதற்கு பதிலளித்த திரு. சரவணமுத்து;

'இலங்கைத்திவு மீன்வளம் மிக்கது. இங்கு மீன்பிடித் தொழிலைத் தொழிலாகக் கொண்ட மக்கள் பலர் வாழுகின்றனர். மீனவர்கள் நவீன முறைகளை, இலங்கையின் மீன் வளம் பற்றிய விஞ்ஞான ரீதியான அறிவைப் பெறுவதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறார்கள். ஏனெனில் இலங்கையில் மீன்பிடி பற்றிய நவீன விருத்திகளைப் பற்றியோ, விபரங்களைப் பற்றிபோ, விருத்திக்கான ஆதாரங்களைப் பற்றியோ இலங்கைச் சூழலிலுள்ள மீன்வள விபரங்கள், ஆதாரங்களையோ எடுத்துக் கூறும் நூல்கள், புள்ளி விபரங்கள், விளக்கங்களைப் பெறுவது மிகவும் கஷ்டமாக உள்ளது. குறிப்பாக எமது யாழ். பொதுசன நூல் நிலையம் தனித்துவமான ஓர் அறிவுக்களஞ்சியமாக விளங்குகிறது ஆனல் இந் நூல் நிலையத்தில் மேற்கூறிய எவ்வகையான விளக்கங்கள் தகவல்களைத் தரும் நூல்களைக் காண முடியாதுள்ளது. சாதாரணமான மீன்பிடி பற்றிய சிறு சஞ்சிகைகள் கூடக் கிடைப்பது அபூர்வமாக உள்ளது விவசாயத்திற்கான விளக்கங்கள், தகவல்களை தரும் நூல்கள், ஆதாரங்கள் பெறக்கூடியனவாகவுள்ளன

பொதுவாக இலங்கையில் மீன்பிடித்தொழில் விருத்திக்கு வேண்டிய விபரங்கள், ஆதாரங்கள், புதிய தகவல்களைப் பெறமுடியாது உள்ள நிலைமையை யாழ். பொதுசன நூல் நிலையம் நீக்க முன்வரவேண்டும். ஏனெனில் யாழ் குடாநாட்டில் பாஷையூர், நாவந்துறை குருநகர், மயிலிட்டி, பருத்தித்துறை, தீவுப்பகுதிகள் மீன்பிடித் தொழிலில் சிறப்புப் பெறுகின்ற இடங்களாகும். இப்பகுதியிலுள்ள மீனவர்கள் பெரும்பாலும் நல்ல ஊக்கமும் திறமையுமுள்ளவர்கள் ஆனல் புதிய முறைகளையோ, இலங்கையின் மீன்வளம் பற்

(8-ம் பக்கம் பார்க்க)


## மீன்பிடி தொழிலாளருக்கு ஒரு நற்செய்தி

உங்களுக்குத் தேவையான சகலவிதமான அளவுகளிலும் நைலோன் மீன்பிடிவலைகள், நைலோன் நூல்கள், குறுலோன் தங்கூஸ் கம்பாகங்களும் மீன்பிடி உபகரணங்களும் வேண்டிய விதமான நிறங்களிலும், சகாயமான விலைகளிலும் கீழ்க்குறிப்பிட்ட இடங்களில் பெற்றுக்கொாளலாமென மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்.

**ஜாபர்ஜிஸ் இன்டர்நெஷனல் லிமிட்டெட்**

148, ஆமர் வீதி. கொழும்பு-12. டெலிபோன்: 21471.

218, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். டெலிபோன்: 409.

[0741[

## CANTABIA INSTITUTE

LONDON

I. C. M. A, I A.A. I. A. B—MAY/JUNE 79

இலங்கை

CHARTERED NOVEMBER 1979

பரீட்சைகளுக்கு

புதிய வகுப்புகள் 4-12-78-ல் ஆரம்பமாகின்றன.

கொழும்பு OXONIA விரிவுரையாளர்கள் தொடர்ந்து இங்கு வகுப்புக்களை நடாத்துவார்கள்.

விபரங்களுக்கு உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள்.

**Cantabia Institute**

166, ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்.

0755



## வரி விளம்பரம்

### தேவை

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள கண்ணாடித் தொழிற்சாலைக்கு 14 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் வேலை பழகுவதற்கு உடனடியாகத் தேவை. வேலை பழகும் பொழுது சம்பளம் கொடுக்கப்படும். நேரில் வரவும். 0738

கலர் வேலை தெரிந்த மெசின் மைண்டர் தேவை. நேரில் வரவும். ஆர். எஸ். அச்சகம், 149, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 0758

தகுதிவாய்ந்த மோட்டோர் மெகானிக்ஸ் (பெற்ரூல்) தேவை. விபரங்களுக்கு நேரில் வரவும் ஸ்ரான்லி மோட்டோர்ஸ் (யோர்ஜ் கராஜ், 52, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 0769

அரசாங்க ஊழியர் குடும்பத்தருக்கு யாழ். நகர எல்லைக்குள டிசம்பர் 15-ம் திகதிக்கு முன்னர் மின்சாரமும், நீர வசதியும்கொண்ட ஒரு வீடு வாடகைக்குத் தேவை. முற்பணமும் கொடுக்கப்படும. கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 0775, C/o ஈழநாடு லிமிட்., யாழ்ப்பாணம். 0775

யாழ். மாநகரசபை எல்லைக்குள் சாப்பாட்டு வசதியுடனே, இல்லாமலோ தங்குமிட வசதி தேவை. கடித மூலம் தொடர்பு கொள்க. விளம்பர இல: 0765, C/o, ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 0765

சுமார் 30 வயதுள்ள அரசாங்க எழுதுவினைஞர் ஒருவருக்கு மணமகள் தேவை. சீதனம் வேண்டாம். சாதி, சமய வித்தியாசங்களும் கவனிக்கப்படமாட்டா. வறுமையைத் தாங்கிக் கொள்ளக் கூடிய நல்ல குணமும், 30க்குக் குறைவான வயதுமுள்ள, அரசாங்கத் தொழில் இல்லாவிடினும் சிறு வருமானமாவது கிடைக்கக் கூடிய குடிசைக் கைத்தொழிலிலாயினும் ஈடுபட்டுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். விளம்பர இல: 0733,C/o, ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 0733

பட்டதாரி ஆசிரியர் ஒருவருக்கு 25க்கும் 35க்கும் இடைப்பட்ட வயதுள்ள மணமகள் தேவை. ஆசிரியையாயின் விரும்பத்தக்கது. குடும்ப அங்கத்தவர்கள் ஒவ்வொருவரினதும் தொழில் நிலவரங்கள் உட்பட முழு விபரங்களுடன் (முடியுமாயின் மணப்பெண்ணின் புகைப்படத்துடனும்) விண்ணப்பிக்கவும். ஏற்றுக்கொள்ளப்படாவிடின் விண்ணப்பங்கள் புகைப்படத்துடன் திருப்பி அனுப்பப்படும். இரகசியம் பாதுகாக்கப்படும். விளமபர இல: 0732, C/o, ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 0732

### விற்பனைக்கு

8 ஸ்ரீ தொடர்பு இலக்கம் கொண்ட VESPA 150c c. SUPER ஸ்கூட்டர் விற்பனைக்கு உண்டு. முகவரி மா. திருவாசகர் 'விமல மலர்' வட்டுமேற்கு, வட்டுக்கோட்டை. 0750

நீமியா பசளை: மண்ணை வளப்படுத்தி அதிக விளைச்சலைப் பெற நீமியா பசளையை வாங்கி உபயோகியுங்கள். கரும்பு, எலுமிச்சை, முந்திரிகை, வாழை, நெல் ஆகியவற்றிற்குச் சிறந்தது விவசாயிகளின் நன்மை கருதி 50 இருத்தல் கொண்ட பைகளில் விற்பனையாகிக்கொண்டிருக்கிறது. மில்க்வைற்- யாழ்ப்பாணம். 0753

உரும்பராய் தெற்கு செல்லத்துரை வீதியில் இருக்கும் 3¼ பரப்புக்காணி. வீட்டுடன் விற்பனைக்குண்டு. குமாரசண்முகம், செல்லத்துரை வீதி, உரும்பிராய் தெற்கு. 0764

முட்டையிடும் கோழிகள் விற்பனைக்குண்டு. நேரில் வரவும். திருமதி இந்திராணி கந்தசாமி, அம்மன் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். 0757

அசல் அல்சேஷன் பெண் நாய். வயது 1 வருடம் 8 மாதம், சாம்பல் நிறம். தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்:- K. சோமசுந்தரம், சோதிடர், தம்பி கரைச்சடி காங்கேசன் துறைவீதி, கோண்டாவில். 0767




## ஸ்கந்தா பழைய மாணவர் மன்றம்

மேற்படி மன்றத்தைப் புனரமைக்க இருப்பதால் அங்கத்தவராகச் சேர விரும்பும் அனைவரும் தங்கள் பெயர், முகவரி, சந்தாப்பணம் ரூபா மூன்று (ரூ 3/-) ஆகியவற்றை கூடிய சீக்கிரத்தில் இணைச்செயலாளர் பழைய மாணவர் மன்றம், ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்,

வை. நடராசா, இணைச்செயலாளர், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

சி. தியாகராசா, அதிபர்

0776



# உலகம் ஆயிரம் சொல்லட்டுமே!

எஸ். சுரதா

இரத்தினபுரியிலுள்ள பிரபல கடையொன்றில் பிரபாகரன் கடந்த சில நாட்களாக வேலே செய்கிறுன். வேலே என்றுல் கடுமையான வேலே என்றில்லே. அன்றுடம் நடைபெறும் வரவு—செலவுகளை கூட்டிக் கழித்து பதிவேட்டில் பதியும் வேலேதான்.

பிரபாகரன் முன்னிருந்த கலண்டர் அவன் இங்கு வந்து ஐந்து நாட்களாயிற்று என்பதை உணர்த்திக் காட்டியது. கூடவே வீட்டுச் சிந்தனையும் தொடர்ந்தது. வீட்டுக்கு ஒரு கடிதம் "நான் இங்கு நிற்பதாகவும் என்னைத் தேடவேண்டாம்" என்றும் எழுதுவமா என்று யோசித்தான். இப்படியே ஐந்து நாட்களாக சிந்தித்தும் ஒரு முடிவுக்கும் வராமையை நினைத்து "சீ" என்று அலுத்துக் கொண்டான்.

"என்ன தம்பி யோசனை ...... வீட்டுக்கு கடிதம் இஞ்சை நிக்கிறதெண்டு எழுதிப் போட்டியோ?..." என்றவாறு பக்கத்துக்கடை முதலாளி மயில்வாகனம் கேட்டபடி வந்தார்.

மயில்வாகனம் யாழ்ப்பாணத்தவர். பிரபாகரன் போலவே ஆரம்பத்தில் தொழிலாளியாக இருந்து படிப்படியாக முன்னேறி இன்று முதலாளி என்ற அந்தஸ்தை எட்டிப் பிடித்தவர். இதனுல் தொழிலாளிகளுடன் மனம் விட்டுப்பேசி அவர்களின் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பார். பிரபாகரன் யாழ்ப்பாணத்தவன். தன்னூரான் என்றதால் அவன் மேலே ஒரு தனிப் பிடிப்பு ஏற்பட்டது அவருக்கு. "என்ன செய்கிறது அண்ணை இவ்வளவு பேச்சுக்கும் அவமானத்துக்கும் பிறகுநான் ஒருக்கால் கடிதம் போடவும் வேணுமே... இல்லே— என்னை வீட்டை விட்டுப்போ எண்டவை என்னைப்பற்றிக் கவலேப்படுவினமெண்டே"... என்று விரக்தியாகக் கூறினுன் பிரபா.

"தம்பி அது ஏதோ ஆவேசத்திலே கூறியிருக்குங்கள். உதையெல்லாம் பெரிசா எடுக்கிறதே... உனக்கும் வந்த நாள் தொட்டுச் சொல்லுறன்...நீயும் கேட்கிற வழியைக் காணம்..."

"அப்ப... இப்ப நான் செய்தது பிழையெண்டு சொல்லுறியளே அண்ணை" பிரபா ஆவேசத்துடன் கேட்டான்.

"ஆத்திரப்படாதை தம்பி நீ...செய்தது சரி ஆனல்... வீட்டை விட்டு வெளிக்கிட்டதுதான் பிழை.

"அப்ப அவையள் வீட்டை விட்டு-போடா என்று சொல்லேக்கை நான் எல்லாத்தையும் கேட்டுக் கொண்டிருக்க வேணும்; எனக்கு மானம்... ரோஷம் ஒன்றுமில்லே..."

"அட....விசரா... அப்படிச் சொன்னதார்?... பிறத்தியாளே— உன்னைப் பெத்த தாய் தானேடா; அடிக்கிற கைதான் அணைக்கும்...உன்ரை அவசரப்புத்தியாலே என்ன மாதிரி யாழ்ப்பாணத்திலே இருக்கிறதை விட்டுட்டு படிப்பையும் குழப்பிக்கொண்டு இந்த ஊருக்கை வந்து கஷ்டப்படுகிருய்... சரி சரி நான் சொல்லி என்ன உன்ரை புத்தியைப் பாவிச்சு நட...எனககு சன வேலேயள் கிடக்கு... பிறகு வாறன்"...என்று விட்டு மயில்வாகனம் சென்றுர்.

மயில்வாகனம் சென்ற பிறகு வீட்டில் நடந்த சம்பவத்தை மீண்டும் நினைவு கூர்ந்தான் பிரபாகரன்.

அப்பொழுது பிரபா யாழ்ப்பாணக் கல்லூரியொன்றில் உயர்தர வகுப்பில் வர்த்தக மாணவனுகப் படித்துக் கொண்டிருந்தான். அன்றுமாலே வழக்கம்போல் பாடசாலே முடிந்தவுடன் வீடு வந்தான்.

பாடசாலேயால் வந்து உடுப்பு மாற்ற நுழைந்தவனை "பிராபா" என்று அம்மா கத்திக் கூப்பிட்டுக்கேட்டது.

உடுப்பை மாத்தாமல் அதே நிலேயில் என்ன என்ற தோரணையில் வெளியே வந்தான்.

"டேய்...உன்ரை மாமா வந்து இவ்வளவு நேரமும் கத்திவிட்டுப்போகிறுர்... ஏன் தான் உனக்கு இப்படிப் புத்தி போகுதோ" அம்மா கோபத்துடன் இரைத்துக் கத்தினு.

"ஏன் இப்ப... உப்படி அயலட்டையெல்லாம் கேட்க கத்துறியள்... ஆற்றைகுடி முழுகிப்போச்சு..."

"குடி முழுகிப்போச்சோ? ...உன்னுலேதான் குடிமுழுகிப் போகுது... ஏற்கனவே கொப்பர் குடிச்சு குடிச்சு மானத்தை போக்காட்டியாச்சு... இப்ப இருக்கிற கொஞ்ச நஞ்சத்தையும் நீ பேக்காட்ட வந்திருக்கிருய்..."

"அம்மா... விஷயம் விளங்காமல் நான் பதில் சொல்லேலாது... கொஞ்சம் விளக்கமாகத்தான் சொல்லுங்கோவன்."

"டேய்...நீ கண்ட கண்ட சாதிப் பொடியளோடை திரியிறையாம்... எங்கடை சாதி என்ன- அவங்கடை சாதி என்ன? என்ன துணிவிலே நீ அவங்களோடை திரியிருய்... தட்டிக்கேட்க ஆளில்லே எண்ட எண்ணமே... நல்ல காலத்துக்கு மாமாவந்து சொல்லிவிட்டார்..." -அம்மா பொரிந்து கொட்டினு.

இது மாமாவின் வேலே தான் எண்டு பிரபாவுக்கு விளங்கியது.

"இஞ்சை அம்மா தான் இப்ப என்னத்தைச் செய்து போட்டன் எண்டு அயலட்டை எல்லாம் கேட்க கத்துறியள். அவன் என்ரை சிநேகிதன் எண்ட முறையிலே அவனுடை சேர்ந்து திரிஞ்சன்; அவன் என்ன சாதியெண்டாலும் அதைப்பற்றி கவலேயில்லே" ...பிரபா சாதாரணமாகக் கூறினுன்.

"உன்ரை கதையைப் பார்த்தால் சிநேகிதன் எண்டு போட்டு அவன்ரை வீட்டை போய் சாப்பிடுவாய் போலே கிடக்கு..."

"அம்மா- உதெல்லாம் அந்தக் காலம்தான். இப்ப சாதி, சமயம் ஒருதரும் பாக்கிறதில்லே. அவன் என்ரை சிநேகிதன் எண்ட முறையிலே கூப்பிட்டால் போவன் சாதியைப் பற்றி எனக்கு அக்கறையில்லே..." அம்மாவுக்கு கோபம் கூடியது

"கீழ்சாதிகளோடை சேர்ந்து சட்டம் வேறை கதைக்கிருய் என்ன...?

"நான் இப்ப சட்டம் கதைக்கேல்லே அம்மா நியாயத்தைச் சொல்லுறன் மாமா கீழ்ச்சாதியள் குடுத்த கள்ளுக் குடிக்கலாம் அதுகுற்றமில்லே; ...நான் கதைச்சால்தான் குற்றமோ... அவர் மாமா எண்டவர் பெரிசாச் சொல்ல வந்துட்டார்ராம் சொல்ல... ஏதோ அவற்றை காலிலே நான் நிக்கிறதெண்ட நினைப்பு..."

"பிரபா...நான் சொல்லுறன் நீ அவங்களோடை வைச்சிருக்கிற சிநேகிதத்தை விடப் போகிறியா இல்லே..." அம்மா ஆவேசத்துடன் கேட்டா.

"ஒரு சிலரின் சுயநலத்துக்காகவும் ஊர் உலகத்துக்குப் பயப்படாமல் என்ரை சிநேகிதனை அவன் என்ன சாதியாயிருந்தாலும் விடமாட்டேன். ஊர் உலகத்துக்குப் பயப்படாமல் என்ரை மனச் சாட்சிக்கு சரியாக நடக்கிறன்."

ஒரு நாளும் எதிர்வார்த்தை கதையாத பிரபா அன்று கதைத்தது மேலும் கோபத்தை ஊட்டியது.

"உனக்கு அந்தளவுக்கு எதிர்த்துத் கதைக்க வந்துட்டுதோ... அப்ப நான் சொன்னுலும் கேட்க மாட்டாய் என்ன?..." அம்மாவின் ஆவேசம் கூடுகிறது.

"அம்மா... ஏன் இப்படிக் கத்தி ஊரைக் கூட்டிறியள் நான் கிட்டத்தானே நிற்கிறன்..."

"டேய் நான் கேட்ட கேள்விகளுக்கு பதிலேச் சொல்"

"அம்மா...நீங்கள் ஊர் உலகத்திற்குப் பயப்பிடுகிறிவள்... நீங்களெல்லாம் இப்படியே அவர்களை மதிக்காமல் ஊர் உலகத்திற்குப் பயந்தால் அவர்கள் எந்தக்காலம் முன்னேறுவது? ஊர் உலகம் ஏதும் சொல்லும் என்று பயந்து பயந்து நாங்கள வாழ வேண்டுமென்றுல் நான் இந்த விஷயத்திலே கட்டுப் படமாட்டேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்"

தனது சொல்லுச்கு நான் கட்டுப்படாது போகவே கோபம் கூடி அம்மாவுக்கு மூச்சு இரைத்தது.

"என்ரை சொல்லுக்கேக் சாதவன் இனி எனக்குகென்ன பிள்ளே... நானும் இனி உனக்குக் தாயுமில்லே... இனி இந்த வீட்டையும் உனக்கு இடமில்லே..."

"அம்மா..." பிரபா இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லே.

"உன்னேடை கதைக்கவே எனக்கு விருப்பமில்லே எந்தக் கேடுகெட்ட நாயளுக்காக நீகதைச்சியோ அதுகள் வீட்டையே போய்க்கிட... போ"

அயல் வீட்டு வேலியின் இடுக்கிலுல் நான்கு ஐந்து தலேகள் எட்டி விடுப்புப் பார்த்தன. இனி நிற்பது அவமானம் என்று கருதிய பிரபா உடுத்திருந்த உடுப்புடன் களம்பிவிட்டான்.

'என்னடா மச்சான் யோசனே...வீட்டு ஞாபகமோ என்றபடி கேட்டுக்கொண்டு வந்தான் நண்பன் வேணு.'

வேணு பிரபா வேலேயாக்கும் கடைமுதலாளியின் மகன்.

'வேறை எதைப்பற்றி யோசிக்கிறது. வீட்டுயோசனையும் இந்த உழுத்துப்போன சாதியையும் சமுதாயத்தையும் பற்றித்தான். இது எப்ப அழியுதோ அப்பதான் தமிழ்ச் சமுதாயத்துக்கு விடிவு...' பிரபா எரிச்சலாகக் கூறினுன்.

'டேய் நீ சொல்லுறது சரிதான். ஆனுல் உன் ஒருவனுல் இந்தச் சமுதாயத்தை திருத்த முடியாது,'

'நீ சொல்லுறதை நான் ஒப்புக்கொள்ளுறன் வேணு... ஆனுல் என்னைப் போல் ஒவ்வொருவனும் ஈடுபட்டால் முடியாதெண்டா சொல்லுகிருய்.'

'உன்னேடை கதைக் கேலாது...ஏதோ உனக்குச் சரியானதைச் செய்...எனக்கு லேட்டாகிவிட்டது. நான் வாறன்' என்றுவிட்டு வேணு சென்றுன்.

மீண்டும் சிந்தனை தொடர்ந்தது.

வீட்டை விட்டுக் கிளம்பிய பிரபு அன்றிரவு நண்பன் ஜெயா வீட்டில் தங்கிவிட்டுத் தன்னுடன் ஒன்முகப்படித்த நண்பன் வேணுவின் மூலம் கணக்காளராக நியமிக்கப் பட்டவரைக்கும் ஞாபகம் வந்தது.

டிங்...டிங் வாசலில் கேட்ட மணியோசை மீண்டும் பிரபாவின் சிந்தனையைக் கலேத்தது 'பிரபாகரன்' என்றவாறு போஸ்ட்மன் ஒரு கடிதத்தை எடுத்துக்கொடுத்தான்.

கடிதத்தை வாங்கிய பிரபா, யாராயிருக்கும் என எண்ணியவாறு கடிதத்தை உடைத்தான். நண்பன் ஜெயா எழுதியிருந்தான்.

அன்பு நண்பன்!

நலம். நலமறிய ஆவல். நீ உங்கு போனபின் நான் உன்னுடைய வீட்டிற்குச் சென்று உனது அம்மாவிடம் நீ இரத்தினபுரியில் இருப்பதாகக் கூறினேன். உன்னுடைய அப்பா, தம்பி இவனுக்கு அதுக்கு இவ்வளவு ரோஷம் வந்திருக்கக்கூடாது போ என்றவுடன் போறதே, கடைசி நான் வேலேயாலே வரும்வரைக்கும் பொறுத்திருந்திருக்கலாந்தானே, என்னை மதிக்காமல் வீட்டை விட்டுப் போனவனைப் பற்றி நான் கவலேப்படல்லே என்று கூறினுலும் கண்கள் கலங்கியிருந்தன உன்ரை அம்மா 'நான் என்ன தம்பி ஏதோ கோபத்திலே சொன்னது இவனுக்கு இவ்வளவு கோபம் வருமெண்டு யார் கண்டது? படிப்பையும் குழப்பிக்கெண்டு போய் நிற்கிருன் என்று கூறினு. இரண்டு நாளுக்கிடையில் உருவம் பாதியாகி கவலேயால் மெலிந்திருக்கிறு.'

இதற்குமேல் அவனுல் ஒன்றும் வாசிக்க முடியவில்லே. கண்களிலிருந்து இரு கண்ணீர்த்துளிகள் கடிதத்தில் விழுந்தன அவசரம் அவசரமாக யாரும் பார்த்துவிட்டார்களோ எனப் பார்த்துவிட்டு கண்களைத் துடைத்துக் கொண்டு மிகுதியையும் படித்தான்.

உன்ரை கவலேயாலே உன்னுடைய அப்பா இப்பொழுது அதிகம் குடித்துவிட்டு 'எல்லாத்துக்கும் நீதாண்டி காரணம்' என்று பேசி சண்டை போடுவதென்று உனது பக்கத்துவீட்டு பாலன் சொன்னன். எனக்கென்னவோ நீ இப்படிக் கோபம் சாதிப்பது சரியில்லே எனப்படுகிறது. ஏதோ நீ உன்ரை புத்திக் கேற்றபடி நடந்துகொள். உன்னுடைய மாமாவின் மகள் சாந்தி தன்னுடன் படிக்கும் யாரோ ஒரு சாதிகுறைந்தவனுடன் ஓடிவிட்டாளாம். தனக்கு இப்ப உலகத்தைப் பற்றி விளங்குதெண்டும் இனி மேல் நீ எந்தச் சாதிகுறைந்த பொடியளோடை திரிஞ்சாலும் இனி நான் கட்டுப் படுத்தமாட்டன் என்றுப் அம்மா உனக்கு எழுதச் சொன்னு.

கடிதத்தைப் படித்த பிரபா ஒரு முடிவுக்கு வந்தவனுய் கடையில் நின்ற ஒருவனிடம் 'முதலாளி கேட்டால் தபால் கந்தோருக்குப் போட்டார் என்று சொல்' என்று கூறிவிட்டு நடந்தான்.

போகும் வழியில் மயில்வாகனத்தின் கடைக்குச் சென்று 'அண்ணை காசு அனுப்பவேணும் எண்டியள் தாறியளே' என்று கேட்டான் பிரபா:

'தம்பி...நீ வீட்டை கடிதம் போட்டுட்டியே... மயில்வாசனம் ஆச்சரியத்துடன் கேட்டார்.

'நான் போடேல்லே அண்ணை.' தம்பி உனக்கு எத்தனைதரம் சொன்னுலும்... என்று இழுத்த மயில்வாகனம் மிகுதியை முடிக்கமுன்-

'நான் அனுப்பேல்லே அண்ணை. ஆனுல் வீட்டை போகப்போறன்'...என்று இழுத்தான் பிரபா.

அப்படிச் சொல்லன் சங்கதியை...அதுதான் நல்ல பிள்ளைக்கு அழகு...இனி மேலெண்டாலும் ஊரோடை ஒத்துப்போகப் பார் தம்பி'

'அதுதான் முடியாது அண்ணை இப்பவும் வீட்டை இனி உன்ரை விஷயத்தில் தலேயிடவில்லே எண்டு [illegible] வந்தபிறகுதான் போறன். மற்றும்படி உலகத்துக்குப் பயநதல்ல. இண்டைக்குப் பணம் இருந்தால் ஊர் வாயை மூடிக்கொண்டிருக்கும்; பணம் இல்லாட்டில் வாயில் வந்தபடியெல்லாம் கதைக்கத்தான் செய்யும். ஏழைகுடிச்சால் குடிகாரன், பணக்காரன் குடிச்சால் அது வேறை விசயம், இப்படித் தானண்ணை உலகம், இதுக்குப் பயந்து வாழலாமே!'

மயில்வாகனம் பின் ஒன்றும் கதைக்கவில்லே. என்னத்தைக் கதைப்பது...'

சரி, அண்ணை...நான் நாளைக்குத்தான் போறன். முதலாளிக்கும்...சில பேருககும் சொல்லவேணும். கொஞ்சம் கணக்கும் பதியவேணும். நான் அப்ப வாறன். பிறகு நாளைக்குப் போகேக்கை ஒருக்காச் சந்திக்கிறன் என்று கூறியபடியே' தனது கடையை நோக்கி நடந்தான பிரபா.

[யாவும் கற்பனை]

---

## இருமுனைகள்

சவரப்பிளேடுக்கு
இரண்டு முனைகள்,
மழுங்கினுல் ஒன்று
மறுமுனை உதவும்!
இரண்டும் மழுங்கின்
பிறிதொன்று தேவை.
தொட்டதின் தோஷம்
தொடர்கதை யாகும்!
முடியினை இறக்கும்
முடிவினை ஒழிப்பின்
தாடியும் மீசையும்,
சடாமுடி யாகும்!
ஒன்றுக்கு ஒன்று
ஓர் முனை யுண்டாம்.
என்றும் உலகினில்
இது விதியாமே!

-'பேனு'

---

## கீதா உபதேசம்

எக்காரியத்திலும் பற்றை ஒழித்துச் செய்வாயாக. செய்வன செவ்வனவே செய்வாய். செய்வதின் பயன்களை நாடாதே.

பிறருடைய தருமத்தைத் தான் ஏற்றுக்கொண்டு குறையின்றித் தான் அனுஷ்டிப்பதைக் காட்டிலும் தன் தருமத்தை அனுஷ்டிப்பதே மேலானது. பிறர் தருமத்தை ஏற்பது அபாயம். தீமைக்கு இடமாகும்.

இந்திரியங்களை அடக்கக் கூடியது மனம். மனத்தை ஆள்வது புத்தி.

நிலம், நீர், தீ, காற்று ஒளி, மனம், புத்தி, நான் ஆகிய எட்டு அம்சங்களாவேன் நான்.

-கண்ணன்

# நித்திரையும்—காலை விழிப்பும்

ஆங்கிலம்: டாக்டர் அருளானந்தன்

தமிழ்: வ. குகசர்மா

“அதிகாலையில் விழித்தெழுவது நன்மை பயக்கும்” என்பது ஒரு முதுமொழி. ஆனால் “அதிகாலையில் படுக்கையில் இருப்பது இனிமையானது” என்னும் அபிப்பிராயமும் அதிக மக்களிடையேகாணப்படுவதொன்று. இயற்கைக்கு மாறாகக் காலையில் தோற்றும் மங்கலான ஒளியின் தூண்டுதலினால் அல்லது மணிக்கூட்டின் அலார ஓசையினால், தமது நித்திய வேலைகளுக்காகக் கட்டாயமாக எழும்புபவர்களும் உண்டு.

தற்கால விஞ்ஞானம், நித்திரையைப் பற்றி அதிகமாகக் கூறியுள்ளது. நமது நித்திரைக்கு எவ்வளவு நேரம் தேவை, மருந்துகள் உதவியின்றி, இயற்கையாகவே உரிய நேரத்திற்கு நித்திரை செய்தலுக்கேற்ற வழி- இவற்றை ஆராய்ந்து கூறும் விஞ்ஞானம், நித்திய வாழ்வைச் சுறுசுறுப்புள்ளதாக்கும் காலை விழிப்பைப் பற்றி ஒன்றும் கூறவில்லை.

## மனோசக்திகள்

விழிப்புநிலை வந்தவுடன் நாம் ஏன் படுக்கையில் நின்றும் எழும்பத் தயங்குகிறோம். நித்திரையின் மாயமான மறுமுனையைப் பற்றி நாம் சிந்திப்பதில்லை. அவ்வாறு சிந்தி-போமானால் காலையில் நாம் எப்போ எழும்பவேண்டுமோ அந்த நேரத்தில் எழும்புவதன் நன்மைகள் புலப்படும்.

நாம் நித்திரைக்குச் சென்றவுடன் பல்வேறு பகுதிகளினால் கட்டுப்படுத்தப்படும் பலவித மனோசக்திகள் தளர்வடைகின்றன. அவை ஒரு குறிப்பிட்ட முறையிலே தளர்வடைகின்றன. முதலில் தன்னம்பிக்கை. அதனைத் தொடர்ந்து விவேகம், ஞாபக சத்தி, கற்பனாசக்தி என்பன நலிவடையும். அதனைத் தொடர்ந்து மணக்கும் உணர்வும், கேட்கும் உணர்வும், பரிச உணர்வும் குறைந்து இறுதியில் அசைவதும் நின்றுபோம்.

காலையில் எழும்போது நலிவடையும் அசையும் உணர்ச்சி முதலாக ஒவ்வொரு உணர்ச்சியும் தோன்றும். இறுதியில் தன்னம்பிக்கை தோன்றும். சிலவேளைகளில் மூளை எங்களை உடனே எழும்பும்படி கட்டளையிடுவது முடியாத காரியம் நாம் விழித்தவுடன் படுக்கையிலிருந்து எழப் பழகிக்கொள்ளவேண்டும். படுக்கையிலிருந்து எழுத்திகைப்பவரின் இழப்பு அதிகமானது.

கேட்கும் உணர்வு ஏற்பட்டவுடன் நித்திரையிலிருக்கும் ஒருவருக்குத் தன்னைச் சுற்றிப் பேசுவது, நடப்பது எல்லாம் கேட்கும் ஆனால் நேரத்தின் உணர்வு தெளிவாகியிராது. அந்த நேரத்தில் அவர் இன்னும் சில நிமிட நேரங்கள் படுத்திருப்போமென நினைத்தால் அவர் ஏமாற்றமடைய நேரிடுகிறது' அந்தச் சில நிமிடங்கள் அவரை அறியாமலே அரை மணித்தியாலமோ அல்லது அதற்கு மேலோ போய் விடக்கூடும்.

## நித்திரை அலைகள்

நமது காலை விழிப்பைத் தாக்கும் மற்றொரு உண்மையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நமது நித்திரையின் தன்மை 'அலை'களாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. வழமையாக ஆழமான நித்திரை நடுச் சாமத்திற்கு முந்திய முதல் மணித்தியாலத்தில் ஏற்படுகிறது பிறகு தேய்கிறது. பின் வளருகிறது. இவ்வாறு ஏழாவது மணித்தியாலத்துள் இருமுறை ஏற்படுகிறது. வளர்ந்தவர்கள் பலருக்கு இதற்குப் பின்னும் ஒரு நித்திரை அலை ஏற்படுகிறது இவர்கள் காலையில் எழுந்து அதன் சுகத்தை அனுபவிக்க விரும்புவதில்லை இந்த நித்திரை அலைகளின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் உடலில் வெப்பநிலையை அளப்பதன் மூலம் நிரூபிக்கலாம். உடலின் வெப்பநிலை ஆழ்ந்த நித்திரையில் சற்றுக் குறைந்தும் விழிப்பு நிலைக்குச் சமீபத்தில் ஏறியும் காட்டும்.

நித்திரை ஒழுங்கைக் கொண்டு மக்களை இருவகையாகப் பிரிக்கலாம் 'இரவு' மக்கள், 'பகல்' மக்கள் என்பது அந்த இரு பிரிவாகும். 'வில்லியம் ஒஸ்லர்' கூறுவது போல் இரவு மக்களை 'ஆந்தை' என்றும் பகல் மக்களை 'வானம்பாடி' என்றும் கூறலாம் வானம்பாடி அல்லது பகல் மக்களுக்குப் படுக்கையை விட்டு எழுவதில் அவ்வளவு கஷ்டம் ஏற்படுவதில்லை ஏனெனில் அவர்கள் எழும்பும் நேரம் அலை வீழ்ச்சி நேரத்தில் ஏற்படுகிறது. அந்த நேரம் அவர்கள் மயக்கநிலை குறைவான நிலையில் உள்ளது. அவர்கள் எழுந்தவுடன் வெகு விரைவில் சமநிலை அடைந்து விடுவார்கள். காலையுணவை மிகவும் விரும்பியுண்பார்கள். பிரகாசமான முகத்துடன் தமது தொழிலைச் செய்வார்கள். ஆனால் அவர்களுடைய நிலை மாலையில் தளர்ச்சியடைந்துவிடும்.

'ஆந்தை' அல்லது இரவு மக்கள் இதற்கு முற்றிலும் மாறுபட்டவர்கள். இவர்கள் படுக்கையை விட்டு எழவேண்டியநேரத்தில் ஆழ்ந்த நித்திரை அலையில் அகப்பட்டிருப்பார்கள். எழுந்த பின்பும் அவர்கள் சமநிலைக்கு வர வெகுநேரம் எடுக்கும். சோம்பேறித்தனம் உடையவர்களாகவும், எளிதில் கோபமுடையவர்களாகவும் இருப்பார்கள். அவர்கள் இரவு உணவை விரும்பியுண்பார்கள்.

இந்த ஒழுங்குமுறை நிலையாக நிற்பதில்லை. இரு வருடங்களுக்கு ஒரு முறை மாறுபடுவதுமுண்டு. பல வருடங்களுக்கு மாறுமல் நிற்பதும் உண்டு. இதன் காரணத்தை ஒருவரும் கண்டுபிடிக்கவில்லை.

## பெரிய குற்றம்

எவரையென்றாலும் நித்திரையில் நின்றும் எழுப்புவது பெரிய குற்றம் என்பது டாக்டர் மறே ஸ்ரோட்லை என்பவரின் கருத்து படிக்கும் பிள்ளைகளாயினுஞ்சரி அவ்வாறு எழுப்பக்கூடாது படிப்பிலும் காட்டி நித்திரை பிரதானமானது என்பது அவர் கருத்து.

நல்ல நித்திரை என்பது பிறரால் தூண்டப்படுதலின்றி மணிக்கூட்டின் சத்தமின்றி எழும்பவேண்டிய கட்டாயம் இன்றித் தானாகவே விழித்தெழுதல் என்பது பலரின் கருத்து.

சிலர் எழும்பவேண்டிய நேரத்தில் எவ்வாறு சரியாக எழும்புகிறார்களோ என்பது இன்னும் ஆச்சரியமாகவே இருக்கிறது. அவர்கள் மூளையில் சிறிய அலாம் மணிக்கூடு இருக்கிறதா?

எங்கள் தேகத்தில் நேரத்தை அறிய நுண்ணிய பகுதிகள் இருக்கின்றன எனச் சமீப காலங்களில் விஞ்ஞானிகள் கூறிவந்தாலும், இந்தவிதமான கண்ணுக்குப் புலப்படாத காலங்காட்டிகள் சிலருக்கு மாத்திரம் எவ்வாறு பிரயோசனப்படுகிறதென்பது தெளிவாக இல்லை.

நன்றி: பவான்ஸ் ஜேர்னல்

## மொழிபெயர்க்கும் இயந்திரம்

நவீனகால உலகமே ஒருபிரமாண்டமானமொழிபெயர்க்கும் இயந்திரம் தான். இது இயங்கும் வேகம் நாளுக்குநாள் அதிகரித்துவருகிறது ஒவ்வொரு நாளும் மொழிபெயர்க்கப்பட்ட சுமார் 60 புத்தகங்கள் அச்சகங்களிலிருந்து வெளிவருகின்றன; சர்வதேச மாநாடுகள் பல நடைபெறுகின்றன. 'டப்' செய்யப்பட்ட திரைப்படங்கள் பல திரையிடப்படுகின்றன. ஏராளமான தஸ்தாவேஜுகள் ஒரு மொழியிலிருந்து மற்ற மொழிகளுக்கு மொழிபெயர்க்கப்படுகின்றன.

இந்தத் துறையில் தானியங்கி இயந்திரங்களைப் பயன்படுத்துவது எப்படி? மிகக் கஷ்டமான, ஆனால் மிக முக்கியமான இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண உலகம் முழுவதிலுமுள்ள நிபுணர்கள் முயன்று வருகின்றனர்.

குறைந்த வெப்பநிலைப் 'பிளாஸ்டர்' ஜனனி நிபுணர்களின் 7-வது அனைத்து யூனியன் மாநாடு, அல்மா-அதா மின் விசை நிலையத்தில் நடைபெற்றபொழுது அவர்களுக்கு ஆங்கில-ரஷ்யன், ரஷ்ய-ஆங்கில அகராதி, பிரெஞ்சு-ரஷ்யன், ரஷ்யன்-பிரெஞ்சு அகராதி, மறறும் ஜொமன்-ரஷ்ய, ரஷ்ய-ஜெர்மன் அகராதி ஆகிய மூன்று பிரசுரங்களும் ஒருங்கே கொடுக்கப்பட்டன. பிளாஸ்மா பற்றி விஞ்ஞானப் பிரசுரங்களைப் படிக்கவும். வெளிநாட்டு விஞ்ஞானிகளுடன் உரையாடவும், இந்தப் பிரசுரம் விநியோகிக்கப்பட்டுள்ளது. இந்த அகராதிகளின் “ஆசிரியர்,” ஈ. சி-1020 என்ற கம்ப்யூட்டரும், அதற்குத் தகவல்களைச் சேகரித்துக் கொடுத்த நிபுணர்களும், மொழி இயலாளர்களுமே ஆவர். சாதாரணமாகப் பல ஆண்டுகளில் செய்யப்படக்கூடிய வேலையை இந்த கம்ப்யூட்டர்மூன்றோ மதங்களில செய்துமுடித்துவிட்டது.

பிரெஞ்சு மொழியில் உள்ள ஒரு வாசகத்தை கம்ப்யூட்டரில் கொடுத்தால அதன் ரஷ்ய மொழிபெயர்ப்பை அது உடனே அச்சடித்துக் கொடுத்துவிடுகிறது. தவிர, சம்பந்தப்பட்ட விஷயம்பற்றிய கேள்விகளுக்கும் கம்ப்யூட்டர் பதில அளிக்கிறது. இதற்குத் தேவையான தகவல்களை லெனின்கிராடு போ.தனுமுறைக் கழகம், கிஷனேவ் தொழிற்பயிற்சிக் கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த ரசாயன கணிதத் துறை, மொழியியல் நிபுணர்கள் கொடுத்துள்ளனர்.

எஞ்ஜினியரிங் மொழி இயல் என்பது ஒரு புதிய விஞ்ஞானத்துறையாகும் இயநதிரத்துடன் மனிதன் 'உரையாடுவதை' சாத்தியமாக்குவதே இதன் நோக்கம், இதற்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்பது நிரூபணமாகி வருகிறது.

-ஏ. கொந்த்ரதோவ்

# செங்கண்மாரி - மஞ்சட் காமாலை

— வி. க. விஸ்வலிங்கம் டி. ஏ. எம். —

வெப்பகாலங்களில் அனேகமாக ஏற்படும் இந்நோய் கல்லீரல் அழற்சி (Hepatitis), பித்தக்குழாயில் தடையேற்படல்; பித்தக் கற்கள் விளைந்து குழாயில் அடைப்பையுண்டாக்கல் (Obstructive Jaundice), நச்சுப் பொருட்களினாலும், தொற்று நோய்களினாலும், கல்லீரல் நோயுறல் (Hepatocellular Jaundice) போன்ற பல காரணங்களால் உண்டாகின்றது.

ஒவ்வாத உணவுகளையும், உறைப்புச் சுவையையும் அதிகமாக எடுப்பதாலும், நித்திரை விழித்தல், வெயிலில் அலைந்து திரிதல் போன்ற செயல்களாலும் பித்தம் என்று சித்த வைத்தியர்களால் அழைக்கப்படும் உயிர்த்தாது விருத்தியாகி கோளாறடைவதால் இந்நோய் ஏற்படுவதாக மாதவ ஹரன் எனும் பண்டைய வைத்திய அறிஞர் கூறுகிறார்.

நோயின் ஆரம்பத்தில் காய்ச்சல், தலைவலி, குமட்டல், வயிற்றுநோ, உணவில் வெறுப்பு என்பன ஏற்படும் சாதாரணமாக நூறு மில்லி லிற்றர் இரத்தத்தில் 0 25 முதல் 1 மில்லி கிராம் அளவுவரை காணப்படக்கூடிய பித்த நிறமி (Biliroobin) 2 மில்லி கிராம் அளவுவரை அதிகரிப்பதால் கண்களின் வெள்விழிகள் (Conjuctiva) மஞ்சள் நிறமாகின்றன சிறுநீரில் (Urine) இப்பித்த நிறமிகள் சேருவதால சிறுநீர் மிக மஞ்சள் நிறமாகும். குடலுக்கு பித்தம் வராது தடைப்படுவதால் மலம் வெண்ணிறமாகவும், துர்நாற்றமாகவும் வெளியாகும் மேலும் பிததம் குடலுக்கு வராததன் காரணமாக சிறுகுடலில் நடக்கும் சமிபாட்டில் (Intestinal Digestion) தடங்கல் ஏற்படும். நோயின் இரண்டாவது வாரகால ஆரம்பத்தில் தோலில் அரிப்பு ஏற்படலாம் Pruritus).

சிறுநீரில் அரிசிச்சோறு போட்டு வைத்துச் சிலமணி நேரஞ் சென்றபின், சிறுநீரை வடித்துப் பார்த்தால் மாப்பொருள் உருமணிகளுள் பித்த நிறமிகள் சென்றதன் காரணமாக சோறு மிக மஞ்சள் வர்ணமாகக் காணப்படும்.

ஒரு பரிசோதனைக் குழாயில் (Testtube) அரைவாசிப் பாகத்திற்கு சிறுநீரைவிட்டு அதனுள் அயடின் (Iodine) திரவத்தில் சில துளிகள்விட சிறுநீரின் மேற்பரப்பில் பச்சைநிற வளையமொன்று ஏற்படும். இதன் மூலமும் பித்த நிறமிகள் சிறுநீரில் இருப்பதை அறியலாம். தேவைப்படின் ஆய்வுசாலையில் ஈரல் செயற்பாட்டுப் பரிசோதனை (Liver Function Tests) செய்ய வேண்டி நேரிடலாம். பித்தக் கற்களினால் தடையேற்பட்டு சத்தியும் (Vomiting), வயிற்றுக்குத்தும் (Colic) அதிகரிப்பின் சத்திர சிகிச்சை செய்ய வேண்டி நேரிடும்.

ஆரம்பத்திலேயே இந்நோயை நிதானிப்பின் மிக எளிதாக சுகமாக்கலாம் 'சுரமதுதோன்றிற்றென்றால் சோறது தின்னொழிக'; 'ஜ்வராதே லங்கணம் பத்யம்' என்ற வாசகங்களின்படி—ஜீரண சக்தி குறைவான இந்நேரத்தில் திடஉணவுகளை உண்ணுது விடவும்.

ஆடை நீக்கிய பால் நற்சீரகம் அவித்தநீர், நெற்பொரி அவித்தநீர் இவற்றுள் நாட்பட்ட நல சர்க்கரையைச் சேர்த்துபருகலாம் பார்லியரிசக்கஞ்சி, செவ்விளநீர், தோடம்பழச் சாறு என்பவற்றையும் கொடுக்கலாம். காய்ச்சல் தணிந்து ஓரிரு தினங்கள் சென்றதன்பின் திட உணவுகளை (இலகுவாகச் சமிபாடடையக் கூடியவற்றை) அளிக்க வேண்டும். காய்ச்சல் சாதாரண நிலைக்கு வருதல், மலம் மஞ்சள் நிறமாதல், சிறுநீரில் மஞ்சள் நிறங் குறைதல் என்பன இந்நோய் சுகமானதற்கான குறிகளாகும்.

நோயேற்பட்ட பின்பு செவ்விளநீர் அடிக்கடி பருகவேண்டும். இதையும் முறைப்படி சுடுசாம்பலில் வைத்து சூடு காட்டி ஆறியதும் அருந்துவது நன்று. தேசிய வைத்தியர்களின் அனுசரணையுடன் செவ்விளநீரில மூலிகை வர்க்கங்களையிட்டுக் காய்ச்சியகுடிநீரை பருகுவது விரைவில் சுகத்தைத் தரும். இக்குடிநீரிற் கீழ்காய் நெல்லி எனும் மூலிகையை சேர்ப்பது மிக நல்லது செங்கண்மாரி நோயில் இதன் செயலாற்றுந் திறனை ஆராய்ந்து அறிவது மிக நல்லது.

சாந்த சந்திரோதய மாத்திரை கொத்தமல்லி மிருத்தியாதி; தோடம்பழக் கோரோசனை மாத்திரை, அமுதாதி மாத்திரை, காண்டாமிருகக் கொம்புக்குளிகை, என்னும்மருந்துகளையும், அரவிந்த ஆசவம், சாரிபாத்யாரிஷ்டம் போன்ற லகுமது வர்க்கங்களையும் அனுபவமுள்ள வைத்தியரின் கண்காணிப்பில் நிலைமைகளுக்கேற்ப பாவிப்பது நல்லது கீழ்காய் நெல்லி மூலிகையை நன்கு கழுவி பசுப்பாலில் அரைத்து குடிப்பதும் நல்லது கோரோசனை சேரும் மருந்துகளைப் பாவிப்பது சிறப்பானது

மேல்நாட்டு வைத்தியர்களால் உலர வைக்கப்பட்ட பித்தம் (Desicated Bile Desibyl) உபயோகிக்கப்படுகின்றது. நோயில் உபத்திரவமாக ஏற்படும் உடற் சொறிக்கு (Pruritus) 0 5 வீத கலமின்கலவையை (0 5 %Calamine Lotion) மேற் பூச்சாகப் பாவிப்பா. ஹிஸ்ரமினுக்கு எதிரான (Anti-Histamin) மருந்துகளையும் மிதைல் ரெஸ்ரோஸ்ரரோன் (Metopl-Testosterone) போன்றவற்றையும் நோயின் நிலைக்கேற்ப தருவர்.

இந்நோயாளிகள் குறிகுணங்கள் நன்குமறையும்வரை எண்ணெய் அல்லது கொழுப்பு சேர்ந்த உணவு வகைகள், உப்பு. உறைப்பு. பழப்புளி என்பனவற்றை நீக்கி பத்திரமாக இருத்தல் வேண்டும், வெயிலில் அலைதல் நித்திரை விழித்தல், கடின உடலுழைப்பு என்பனவற்றைத தவிர்க்க வேண்டும். நோயுற்ற நேரத்தில் காய்ச்சல் இல்லாதபோது இதரை வாழைப்பழம், இனிப்புத் தோடம்பழம், கொடி முந்திரிப்பழம் என்பனவற்றை சேர்க்கலாம். மதிய உணவில் வெண்ணெய் நீக்கிய மோரை சேர்க்கலாம்.

காய்ச்சல் தணிந்து ஓரிரு தினங்கள் சென்றதும் கீழ் காய் நெல்லி மூலிகையை பசுப்பாலால் அரைத்து தலைக்கு வைத்து குளிந்த நீரால் தினசரி முழுகவும் தொடர்ந்து கீழ்காய் நெல்லித் தைலம் தலைக்கு வைத்து வருவது இந்நோயினலேற்பட்ட வெப்பத் தாக்குதல்களை தீர்க்கும்.

உசாவு துணைகள்

(1) குணபாடம் பகுதி-I

[7-ம் பக்கம் பார்க்க]

# எளிமையாக வாழும் 'ஸ்டைல்' நடிகர் ரஜனிகாந்த்!

கொழும்பிலிருந்து வெளிவரும் 'கீதா' என்ற சினிமா சஞ்சிகையின் மே மாத இதழில் திரைப்படத் துறையை குதிரைப்பந்தயமாகவும், ஜெய்சங்கர் - கமலஹாசன்- ரஜனிகாந்த் ஆகியோரைக் குதிரைகளாகவும் பாவித்து ஒரு சுவையான கட்டுரை எழுதியிருந்தனர். அதில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தனர். ரஜனிகாந்தை திரையில் பார்த்துவிட்டால்போதும் ஜனங்கள் எப்படியெல்லாமோ கரகோஷம் செய்கிறார்கள். அந்தக் குதிரைக்கென்றே ஒரு ரசிகர் கூட்டம் உருவாகிவருகிறது. காலேஜ் பெண்கள்- குடும்பப் பெண்கள் - பள்ளி மாணவிகள், மாணவர்கள் ஆகிய பலதரப்பட்ட ரசிகர்களை எல்லாம் ரஜனி என்ற குதிரை கவர்ந்துவருகிறது. இந்தக் குதிரையின் ஸ்டைலிலே தனி! நடையே தனி! எல்லாமே புதுப்பாணி! புதுமைப்பாணி! ரசிகர்களைக் கவர்வதற்காக தன்னிடம் உள்ள திறமைகளையெல்லாம் வெளிக்கொணர்ந்து ரசிகர்களின் பாராட்டுதலைப் பெறுகிறது இந்த ரஜனிக் குதிரை என்று எழுதியிருந்தனர்'

இவைகள் நூற்றுக்கு நூறு உண்மையான வாக்கியங்கள், தற்சமயம் எல்லாக் குதிரைகளையும் தோற்கடித்துவிட்டு ரஜனி என்ற குதிரைதான் கண மண் தெரியாமல் முன்னேறிக்கொண்டிருக்கிறது சமீபத்தில் வெளிவந்திருக்கும் 'முள்ளும் மலரும்' என்ற படம் பெரும் வெற்றியடைந்துள்ளது, இது ரஜனிகாந்துக்கு மற்றொரு மைல் கல் ஆகும்.

இத்தகைய வெற்றிப்பட நடிகர் ரஜனிகாந்தை 'ஈழநாடு' வாசகர்கள் சார்பாக சமீபத்தில் சந்தித்தேன். ஆனல் அவரைச் சந்திப்பது என்பது எளிதாக இல்லை. நான் தங்கியிருந்த ஓட்டலில் இருந்து ரஜனிகாந்த்துடன் தொடர்பு கொண்டு 'எங்கேஜ்மெண்ட்' பெறலாம் என்று எண்ணி அவரது தொலைபேசிஎண்ணை தேடினேன். அவரது எண் தொலைபேசி புத்தகத்திலும் இல்லை. அவராக இருக்கும் என்று எண்ணி நான் செய்த போன் கோல்களும் 'ராங் நம்பர்'களாயின. 'அந்த ஓட்டலில் அப்போது கடமையாற்றிக்கொண்டிருந்த 'டெலிபோன் ஆப்பரேட்டர், செல்வி கிரிஜா எனக்கு உதவ முன்வாந்தார். பல வித எண்களுடன் போராடி ஒருவழியாக ரஜனியின் எண்ணைக் கண்டுபிடித்து நான் தங்கியிருந்த அறையின் டெலிபோனுக்கு தொடர்புகொடுத்தார். ரஜனிகாந்த் ஏ. வி. எம். ஸ்ருடியோவில் 3-வது மாடியில் படப்பிடிப்பில்இருப்பதாகவும் அங்கு சென்று அவரைச் சந்திக்கும்படியாகவும் வீட்டிலிருந்து பதில் கிடைத்தது. ஏ. வி. எம். ஸ்ருடியோவுக்கு போன் செய்ததில் ரஜனிகாந்துக்கு அங்கு படப்பிடிப்பே இல்லை என்று கூறிவிட்டனர். எனவே தர்மசங்கடமான நிலையில் அப்போது பெய்துகொண்டிருந்த மழையையும் பொருட்படுத்தாமல் ரஜனிகாந்தின் வீட்டுக்கு விரைந்தேன்.



## 'ஈழநாடு' வாசகர்களுக்காக அளித்துள்ள விசேஷ பேட்டி

சென்னை நகரில் ராயப்பேட்டை என்ற பகுதியில் இருந்த அவரது வீட்டைப் பார்த்ததும் திகைத்து நின்றுவிட்டேன். சினிமா நடிகர்களின் வீடு என்றதுமே ஆடம்பரமான பங்களாவும் அதைச்சுற்றி அழகான புல்வெளியும் ஓநாய் போல தோற்றமுள்ள நாயும், படகுபோன்ற காரும்தான் நமது நினைவுக்கு வருவது வழக்கம் ஆனல் இவற்றிற்கெல்லாம் நேர்மாறுதலாக ரஜனியின் வீடு இருந்தது தான் எனது திகைப்புக்குக் காரணம். மேலே ஓடுகள் வேயப்பட்ட பழங்கால வீடு. அதுவும் வாடகை வீடு. கார் கிடையாது. (கார் வாங்கினலும் கூட அந்த இடத்தில் காரை நிறுத்த இடமில்லை) வீட்டின் எதிரில் மழைநீர் குட்டையாகத் தேங்கி நின்றது.

**வி. ரவிச்சந்திரன்**

### சகோதரர் கூறிய விபரம்

ரஜனியின் சகோதரர் முரளி வரவேற்று உபசரித்து தேநீர் அளித்து ஏ. வி. எம். ஸ்ருடியோவிற்கு போன்செய்து ரஜனிகாந்த் அங்கே இருப்பதை உறுதிசெய்துகொண்டு உடனே அங்கு செல்லும்படி கூறினர் கிளம்புவதற்கு முன்னல் அவரிடம் வீட்டைப் பற்றிய எனது வியப்பைத் தெரிவித்தேன். ''நாங்கள் சென்னைக்கு வந்த நாள்முதல் இவ்வீட்டில்தான் குடியிருக்கிறோம். புதிதாக கிடைத்திருக்கும் நடிகர் என்ற அந்தஸ்துக்காக ஆடம்பரமாக வாழ ரஜனிவிரும்பவில்லை'' என்றார் முரளி. அவர் சொன்னது மட்டும் உண்மையாக இருக்குமானல் நாம் நிச்சயம் அக் குடும்பத்தினரை பாராட்டத் தான்வேண்டும்.

### நல்ல கறுப்பு

மாலை சுமார் 6 மணியளவில் ஏ. வி. எம். ஸ்ருடியோவில் ரஜனி காந்தைச் சந்தித்து அறிமுகம் செய்து கொண்டேன் படத்தில் பார்ப்பதை விட நேரில் சற்று அழகாகவே இருந்தார். எம். ஜி. ஆரைப் போல சிகப்பாகவோ ரவிச்சந்திரனைப்போல மாநிறமாகவோ இல்லாமல் சராசரி இந்தியனைப்போல நல்ல கறுப்பாகவே இருந்தார் தனது உதவியாளரைக் கூப்பிட்டு தெலுங்கில் ஏதோ உத்தரவிட்டார் (ரஜனி காந்த் தமிழ்- தெலுங்கு- கன்னடம்- மராத்தி- இந்தி- ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சரளமாகப் பேசுகிறார்) உடனே அவர் என்னை அழைத்துச் சென்று ஒரு குளிர்சாதன அறையில் உட்காரச் வைத்தார்- சுமார் கால் மணி நேரம் கழித்து வெரி சொறி மிகவும் லேட்டாகி விட்டதா? என்றுகூறிக்கொண்டே அவசரமாக வந்தார் ரஜனி காந்த். அந்த அறையிலேயே அவரைப் பேட்டி கண்டேன். பேட்டி முடிந்ததும் சிற்றுண்டி வரவழைத்து என்னுடன் அவரும் அருந்தினர். நான் ஸ்ருடியோவில் இருந்த மூன்று மணித்தி

[7-ம் பக்கம் பார்க்க]

# தொழிலைப் பெருக்கி செழுமைகாண வழி

**மக்கள் வங்கிக்கிளை முகாமையாளர் விளக்கம்**

(யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாச வலி. மேற்குக் கிளையின் சார்பில் சங்கானை கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் திரு. பொ. கதிர்வேலாயுதபிள்ளையின் கருத்துக்களை நமது நிருபர் இங்கே தொகுத்துத் தருகிறார்)

1961-ம் ஆண்டு மக்கள் வங்கி ஸ்தாபிக்கப்படமுன்பு இலங்கையில் இயங்கி வந்த வங்கிகள் எல்லாம் பணக்கார வர்க்கத்தினர்க்கும் ஏற்றுமதி இறக்குமதியில் ஈடுபட்டுள்ளோர்க்கும், பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட இன்னோரன்ன தோட்ட முதலாளிகளுக்கும்மாத்திரமே சேவையாற்றி வந்தன. அதே வேளையில வறிய சுதேச மக்கள், முக்கியமாக கிராமப்புற மக்களுக்கு எவ்வித வங்கி வசதிகளும் கிடைக்கவில்லை.

இக்குறைபாட்டினல் சாதாரண கமக்காரர்கள், மீனவர்கள், ஏனைய தொழில்செய்வோர் ஆங்காங்கே இருந்த வட்டிக் கடைக்காரர்களை— தங்களுடைய கடன்தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு நாட வேண்டியிருந்தது.

இதனல் இவ்வட்டிக்கடைக்காரர்கள் தங்கள் இஷ்டப்படி நிபந்தனையிட்டு அதிக வட்டிக்கு கடன் கொடுத்ததின் காரணமாக கிராமியத் தொழிலாளிகள் விவசாயிகள் போன்றோர் கடன் பளு என்ற நோயினல் சதாகாலமும் பீடிக்கப்பட்டு இருந்தார்கள். இதனல் அவாகளுடைய வாழ்விலே தன்னிறைவுகாண முடியாதிருந்தது. அநேக குடும்பங்கள் தங்களது தொழிலை விருத்தி செய்வதற்கு வேண்டிய நேரத்தில் போதியளவு பணவசதி இல்லாத காரணத்தால் தமது தொழிலைப்பெருக்கி குடும்ப வருமானத்தை அதிகரிக்க முடியாதிருந்தது இதனல் பல குடும்பங்கள் பசிபட்டினியால் பீடிக்கப்பட்டிருந்தன. நாட்டின் மொத்த வருமானமும் இக்காரணத்தினல் மிகக் குறைந்த அளவிலேயே காணப்பட்டது நாட்டின் மொத்த வருமானம் அதிகரித்து செல்வம்மிக்க நாடாக வளரவேண்டுமாயின் சகல தொழிலாளர்களும் தமது தொழிலை அபிவிருத்திசெய்யக்கூடிய அளவிற்கு போதுமான பண உதவி வேண்டிய நேரத்தில் கிடைக்க வேண்டும் இக்குறைபாடு நீங்கின் நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் தனது தொழிலைப் பெருக்கி செழுமை காணக் கூடியதாக இருக்கும்.

இவ்வாறு செய்வதற்குப் போதியளவுகடனை உரியகாலத்தில் கொடுத்துஉதவ எந்த ஒரு நிறுவனமும் இல்லா தகுறையை 1961ம் ஆண்டு அரசாங்கம் மக்கள் வங்கியை ஸ்தாபித்ததின் மூலம் நீக்கியது. 1961-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மக்கள் வங்கி, இன்று படிப்படியாக நாட்டின் பல பாகங்களிலும் தனது கிளைகளை நிறுவி சேவைபுரிந்துவருகின்றது.

மக்கள் வங்கி நாட்டின் அபிவிருத்திக்கு கூட்டுறவுச் சங்கங்களையும் மையமாகக் கொண்டு செயலாற்றிவருகின்றது. கூட்டுறவுச் சங்கங்களினூடாக அதன் அங்கத்தவர்களுக்கு விவசாயக்கடன்போன்றவற்றை வழங்கிவருகின்றன. மேலும் கூட்டுறவுச் சங்கங்கள் செய்யும் தொழில்களுக்கும் வேண்டிய பண உதவியை கொடுத்துவருகின்றது. சாதாரணமாக வட்டுக்கோட்டைத் தொகுதியை எடுப்போமானல் இங்குள்ள சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் பண்டத்தரிப்பு கோவில்பற்று கூட்டுறவுச் சங்கமும் மின்தறிச் ஆலைகளை அமைத்து சுமார் 1000 பேருக்கு வேலைவாய்ப்பளித்து துணிமணிகளை பெருமளவு உற்பத்தி செய்து வெளியிடங்களுக்கு அனுப்புவதற்கு வேண்டிய பணஉதவியை நாம் அளித்து வருகின்றோம். கூட்டுறவுச் சங்கங்கள் சரியான முறையில் செயற்பட்டுவருமாயின் எமது நோக்கிற்கிணங்க அவ்வப் பிரதேச மக்களின் சுயதேவையை இச் சங்கங்களின் மூலம் பூர்த்தியாக்கக் கூடியதாக இருக்கும். இவ்வாருன எமது கடன் திட்டங்களை இச்சங்கங்களின் செயற்பாட்டுத் திறமின்மையினலே சரிவர அமுல் நடாத்த முடியாதிருக்கின்றது.

ஃ ஃ

### அகல்விரிக்கடன் திட்டம்

உதாரணமாக ஒரு திட்டத்

(7-ம் பக்கம் பார்க்க)



# கவிஞர் கண்ணதாசனுடன் ★ ஒரு சந்திப்பு ★

[சென்ற வாரத்தொடர்ச்சி]

'உங்கள் கவிதைகளில், கட்டுரைகளில்... 'அர்த்தமுள்ள இந்துமதம்' தொடர் வெளியீடுகளிலும் கூட பாலியல் நிறையக் காணப்படுகிறதே. 'செக்ஸை' தவிர்க்கமுடியாதா?'... நான் கேட்டேன்.

'எப்படி பிரிக்கமுடியும்? செக்ஸ்தானே வாழ்க்கை' என்ற ஆஸ்தான கவிஞர்—

'வாழ்க்கையிலிருந்து பாலியலைப் பிரிக்கமுடியாது. பாலியல்தான் வாழ்க்கை. ஆசையினால் 'லைப்'பிலிருந்து 'செக்ஸை' பிரிக்கமுடியாது 'செக்ஸ்' இல்லாத மனிதனே இல்லை; வாழ்க்கையிலிருந்து எதனைப் பிரித்துக்கொண்டாலும் பசி, காதல் இரண்டையும் தடுக்க முடியாது. இது மனித நீதி. ஆசையினால் 'செக்ஸ்' என்று பெரிதாகக் கூறிக் கொள்ளவதில் அர்த்தமில்லை' என்று கூறினார்.

'நீங்கள் இப்பொழுது ஒரு ஆஸ்தான கவிஞர். தமிழ்மக்கள் உங்களிடம் நிறைய எதிர்பார்க்கின்றார்கள். புதிதாக ஏதாவது எழுதப் போகின்றீர்களா?'

'நிறைய ஆசை உண்டு. எனது 'அர்த்தமுள்ள இந்து மதம்' வெளியீடுகளுக்கு நிறைய வரவேற்புக் கிடைத்துள்ளது. விரைவில் புதிய புதிய படைப்புகள்... ஆராய்ச்சிகளை வெளியிடவிருக்கின்றேன்' என்றார் கவிஞர்.

நான் மீண்டும் அரசியலுக்குத் திரும்பினேன்.

**மகான்**

'கலைஞர் கருணாநிதி பற்றி தனிப்பட்ட முறையில் உங்கள் கருத்து என்ன?'—நான் கேட்டேன்.

'நான் கூறுவதைக் கவனமாக எழுதிக்கொள்ளுங்கள்'—கவிஞர் ஆரம்பித்தார்.

'அவர் ஒரு நல்ல நிர்வாகி. ஒரு நல்ல எழுத்தாளர். ஒரு கட்சியைக் கட்டிக்காப்பதில் திறமை மிக்கவர். ஆனால்... அவரிடம் சுயநலம் நிரம்பவும் உண்டு. அவரைப்பற்றிச் சுருக்கமாகச் சொல்வதென்றால் கட்சியில் அவர் சொல்வதுதான் சட்டம். அவர் நினைத்ததுதான் முடிவு. அவர் மனதுக்குள்ளேயே எண்ணுவதை, கட்சி உறுப்பினர்களும் உள்ளூர எண்ணி அதனை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று விரும்புபவர். அவரது வீழ்ச்சிக்கு இதுதான் காரணம். தனக்கு மேல் இன்னுமொருவர் வருவதை அவா விரும்பமாட்டார். அவருக்கு எதிராக எவரும் போர்க்கொடி தூக்கிவிட்டால், அவர்கள் கழகத்தில் இருப்பதை விரும்பமாட்டார். எவ்விதமாகவேனும் அவர்களை கட்சியிலிருந்து டிஸ்மிஸ் செய்யத்திட்டமிடுவார், நிறைவேற்றியும் விடுவார். இந்தச் சுயநலத்தினால் தான், பலர் கட்டிவளர்த்த அக்கட்சிக்கு இன்று பெரிய சோதனை ஏற்பட்டுள்ளது—' கடகடவென்று கூறிமுடித்தார் ஆஸ்தானக் கவிஞர் கண்ண

(8-ம் பக்கம் பார்க்க)


**1ம் பரிசு**
றலி கோஸ்ரர் சைக்கிள்

**2ம் பரிசு**
"சொப்பர்" (கியர்களுடன்)

**3ம் பரிசு**
"சொப்பர்" (கியர்களில்லாதது)

**4ம் பரிசு**
மெக்கானோ செற் இல: 8

**5ம் பரிசு** லேகோ
பிளாஸ்ரிக் பில்டிங் புளொக்.

**6ம் பரிசு**
பேகம் வியூமாஸ்ரா.

**7ம் பரிசு** புத்தகங்கள்
வாங்குவதற்குரியபத்திரம்.

**8ம் பரிசு**
விளையாட்டுச் சாதனங்கள்

**9ம் பரிசு**
பொக்கெற் ரேடியோ.

**10ம் பரிசு** மெலோடிக்கா.

**25 ஆறுதற் பரிசுகள்**
பாட்டா பாதணிகள்
வாங்குவதற்குரிய கூப்பன்கள்.

## நீங்கள் செய்ய வேண்டியது இதுமட்டுமே

கூப்பனிலே கொடுக்கப்பட்டுள்ள வாகன விதிப்போக்குவரத்து அறிகுறிகளின் சரியான பெயரைத் தெரிவு செய்யுங்கள். உரிய இலக்கத்தை குறித்த அறிகுறியின் கீழேயுள்ள சதுரத்தில் எழுதுங்கள், கூப்பனையும் அறிகுறிகளின் இதர விபரங்களையும் பாட்டா வாகன விதிப்போக்குவரத்து அறிகுறிப்போட்டி, த.பெ. எண்.1119, கொழும்பு என்று விலாசமிட்டு டிசெம்பர் 15 க்குமுன்னர் அனுப்புங்கள், ஒவ்வொரு பிரவேசப்பத்திரத்துடனும் நொவெம்பர் 1க்குப் பின்னர் பாதணிவாங்கிய பற்றுச்சீட்டு இணைக்கப்பட வேண்டும் நீங்கள் எத்தனை பிரவேசப் பத்திரங்களும் அனுப்பலாம் ஆனால், ஒவ்வொரு பத்திரத்துடனும், பாட்டா பாதணிவாங்கியதற்கான பற்றுச்சீட்டு இணைக்கப்பட வேண்டும். பிரவேச விண்ணப்பங்கள் உங்கள் பாட்டா வியாபாரியிடம் கிடைக்கும். தெரிந்து எடுக்கப்படும் முதல் முப்பத்தைந்து முழுவதும் அழகான சரியான விடைகளுக்கு பரிசுகள் வழங்கப்படும். 15 வயதிற்குட்பட்ட பாடசாலைப்பிள்ளைகள் மட்டுமே இப்போட்டியிற் பங்குபற்றலாம்.

பாட்டா ஷூ கொம்பனி ஒவ் சிலோன் லிட்., அவர்களது அங்கீகரிக்கப்பட்ட வியாபாரிகள், கிறஸ்ற் கென்யன் அன்ட் எக்ஹாற் (லங்கா) லிட்., ஆகிய தாபனங்களில் வேலைபார்ப்பவர்களும் அவர்களது குடும்பத்தினரும் இப்போட்டியிற்பங்குபற்ற முடியாது. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. இது சம்பந்தமாக எவ்வித கடிதப்போக்குவரத்தும் மேற் கொள்ளப்படமாட்டாது.



## எல்லாச் சிறுவர்களையும் அழைக்கிறோம்!

## பாட்டாவின் வாகன அறிகுறிப்போட்டியில் கலந்து கொள்ளுங்கள்

கூப்பன்



1. செங்குத்தான மலை
2. ஹோரன் ஒலித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது
3. வட்டத்திருப்பம்
4. புகையிரதக்கடவை (பாதுகாக்கப்பட்டது)
5. பாடசாலை
6. பாதசாரிகள் கடவை
7. குறுக்கு ரோட்டு
8. புகையிரதக்கடவை (பாதுகாப்பில்லாதது)

பெயர்:—
விலாசம்:—
வயது:— வகுப்பு:—
பாடசாலை:—

பாட்டா பாதணி வாங்கியபற்றுச்சீட்டை இத்துடன் அனுப்புகிறேன்.
போட்டியின் விதிகளின்படி நடக்க இணங்குகிறேன்.

கையொப்பம் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கையொப்பம்.
லைசென்ஸ் இலக்கம்: S204




GRANT K & E 787

## சரியான திசையில் கால் வையுங்கள் பாட்டா

# தொழிலைப் பெருக்கி...

]5-ம் பக்கத்தொடர்ச்சி[

தினை இங்கு விளக்க விரும்புகிறேன் ஒரு கூட்டுறவுச்சங்கத்திலுள்ள அங்கத்தவர்கள் அனைவருக்கும் தேவையான எல்லாவிதமான கடன்களையும்கொடுத்து வக்கூடிய ''அகல் விரிக்கடன திட்டம்'' சரியாக அமுல் நடாத்தப்படுமாயின் சக்க அங்கத்தவர்கள் வேண்டிய நேரத்தில் தேவையான அளவு கடனைப் பெற்று தமது தொழில்களை விருத்தி செய்வதற்கு வாய்ப்பிருக்கின்றது இந்த அகல் விரிக்கடன் துட்டம் ஒரு குடும்பத்தினருடைய கடன் எல்லாவற்றையும் பூர்த்தியாக்குவதற்கு வாய்ப்பளிக்கின்றது. அங்கத்தவர்களுடைய ஒரு வருட காலத்தில் தேவையான எல்லாவிதமான கடன்களையும் தொகுத்து முற்கூட்டியே சங்கங்கள். கொடுப்பதற்கு ஆராய்ந்து திட்டமிடல் வேண்டும். இவ்வாறு திட்டமிடப்பட்ட எல்லா அங்கத்தவர்களுடைய மொத்த தொகையையும் மக்கள் வங்கியிடம் மனுப்பண்ணிப் பெற்று அங்கத்தவர்களிற்கு வேண்டிய நேரத்தில் வேண்டிய தேவைக்கு குறிக்கப்பட்ட கடனைக் கொடுத்து உதவலாம்.

உதாரணமாக ஒரு குடும்பத்தை எடுப்போமாயின் அக்குடும்பத்திற்கு தை மாதத்தில் வெங்காயக்கடன், பங்குனி மாதத்தில் மிளகாய்க் கடன், வைகாசி மாதத்தில் குடும்பத்திலுள்ள பிள்ளையொன்றுக்கு பல்கலைக்கழத்தில் உயர்கல்வி பெறுவதற்கான கடன், வீடுதிருத்தற் கடன், கடன்பட்டிருந்தால் கடனை மீளுதற்கு கடன் ஆகிய எல்லாவகைக் கடன்களையும முற்கூட்டியேஆராய்ந்துஅவை உண்மைத் தேவையாயின் அவற்றைக் கொடுப்பதற்கு சங்கம் ஏற்ற நடவடிக்கை எடுக்கலாம்.

மீனவர்களுக்கு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களினூடாக உதவி புரிந்து வருகின்றோம். பாறபண்ணைக் கூட்டுறவுச் சங்கங்களினூடாக பாற்பண்ணை வளர்ச்சிக்கு கடன் கொடுத்து வருகின்றோம். சிவல் தொழிலாளர்களுடைய வாழ்க்கை மலர்வதற்காக பனம் பொருள் விற்பனை கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து அவர்களுக்கு மரக்கடன் முதலிய கடன்களைக் கொடுத்து உதவுகின்றோம். இவற்றைவிட மக்களுக்கு தனிப்பட்ட சேவைகளையும் செய்து வருகின்றோம்.

பணம் உடையவர்களுக்கு அவர்களுடைய பணத்தை எமமிடத்தில் முதலீடு செய்யக் கூடிய வாய்ப்புக்களை அளிக்கின்றோம். அவர்களுடைய பணத்தை எமது வங்கியில் நிலையான வைப்பு, சாதாரண சேமிப்பு வைப்பு, முதலீட்டுச் சேமிப்பு வைப்பு ஆகிய கணக்குகளில் போட்டு அதிக வட்டியைப்பெற வாய்ப்பு அளிக்கப்படுகின்றது. எமது புதிய வட்டி வீதம் இதுவரையும் இல்லாதவாறு அதிகரிக்கப்பட்டுள்ளது. மாதா மாதம் வட்டி கொடுக்கும் முறையும் எம்மிடத்தில் உண்டு.

## முதலீட்டுச் சேமிப்பு

எமது கடன் திட்டங்களில் அநேகமானவை முதலீட்டுச் சேமிப்புக் கணக்கோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. முதலீட்டுச் சேமிப்புக் கணக்கைப்பற்றி சற்று விளக்கவேண்டியிருக்கின்றது. இது ஒரு சீட்டுமுறையாகும். மாதாமாதம் குறித்த ஒரு தொகையை 60 மாதங்களுக்கு தொடர்ந்து வைப்பிலிடுவதாக வங்கியுடன் ஒப்பந்தம் செய்து ஒவ்வொரு மாதமும் தவறாது வைபபிலிட்டு வரவேண்டும். இவ்வாறுசெய்துவரின் அறுபது மாதம் முடிந்ததும் வைப்பிலிட்டபணத்துக்குஅதிக வட்டியும் சேர்த்துக்கொடுக்கப்படும்.

இவ்விதம் முதலீட்டுச் சேமிப்புக் கணக்கை சரியாக நடத்துபவர்கள ஆறுமாதம் முடிந்ததும் வீடு திருத்துவதற்கு கடன் பெறலாம். ஒரு வருடம் முடிந்தால் ஈடு மீளவதற்குச் சடன் பெறலாம். ஒன்றரை வருடம் முடிந்தால் வீடு கட்டுவதற்குக் கடன் பெறலாம். இவை சில உதாரணங்களாகும், இவ்வாறு பலவகையான கடன் திட்டங்களை முதலீட்டுச் சேமிப்புக் கணககோடு தொடர்புபடுத்தி அமுல் செய்து வருகின்றோம். மேலும் முதலீட்டுச் சேமிப்புக் கணக்கு வைத்திருப்பவர்கள் அவ்வாறான கணக்கு வைத்திருப்பவர்கள் வேறு இருவரைக் கொண்டு கடன்பெற வசதிகள் உண்டு. ஒருவர் போட்ட தொகைக்கும் அந்தக் கணக்கையே ஈடாகக் கொடுத்த கடன் பெற வசதியும் உண்டு

எமது முக்கிய நோக்கம் நாட்டில் ஏழை பணக்காரர் என்ற பேதம் இல்லாத ஒரு சமுதாயத்தை உருவாக்குவதேயாகும். இவ்வாறு கூறும் போது பணக்காரர்களை ஏழைகளின் நிலைக்கு மட்டம் தட்டுவதென எண்ணக் கூடாது ஏழைகளை அவர்களின் ஆற்றலை வளர்த்து பயன்தரக் கூடிய கடன் வசதிகளை அளித்து அவர்களுடைய நிலைக்கு உயர்த்துவதேயாகும். இவ்வாறு செய்யும் போது நாட்டில் பசி, பட்டினி வறுமைபோன்ற நிலைமைமாறி எல்லோரும் எல்லாம் பெற்று வாழக்கூடிய ஒரு நிலை உருவாகும்.

# செங்கண்மாரி...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]


(2) The Principles and Practice of Medicinesir Stanley Davidson.

(3) Hutchiron's Clinical Methods.

(4) அமரர்: வைத்திய கலாநிதி G. P. அன்ரனி D.A M. அமரர் வைத்திய கலாநிதி V. கனகசபை, ஆசிரியோரின் விரிவுரைக் குறிப்புகள்.

(5) மாதவ நிதானம்-மாதவஹரன்-



Rio (Jaffna)
Daily 4 Shows
Sean Connery
RANSOM



சில தினங்கள் மட்டும்
வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர்-விஜயா
நல்லநேரம்



நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
ஜெய்சங்கர் - லக்ஷ்மி
பெண் தெய்வம்



ராணி [யாழ். நகர்]
சிவாஜி-மஞ்சுளா நடித்த
உத்தமன் (ஈஸ்ட்மன் கலர்)

10-11-78வெள்ளிக்கிழமைஅன்று பரிசுபார்க்கப்பட்ட ''உத்தமன் வெள்ளிவிழா'' பரிசுபெற்ற இலக்கங்கள்:

| | வகுப்பு | இலக்கம் |
|---|---|---|
| 1-ம் பரிசு | DC | 24938 |
| 2-ம் '' | 2-ம் வகுப்பு | 80703 |
| 3-ம் '' | 1-ம் '' | 69399 |
| 4-ம் '' | கலரி | 54152 |
| 5-ம் '' | 1-ம் '' | 68913 |
| 6-ம் '' | கலரி '' | 54024 |
| 7-ம் '' | DC | 24999 |
| 8-ம் '' | கலரி | 53878 |
| 9-ம் '' | 1-ம் வகுப்பு | 68964 |
| 10-ம் '' | 1-ம் '' | 69266 |
| 11-ம் '' | 1-ம் '' | 69440 |
| 12-ம் '' | 1-ம் '' | 69123 |
| 13-ம் '' | 1-ம் '' | 69358 |
| 14-ம் '' | 1-ம் '' | 69018 |

பரிசிற்குரியவர்கள் தங்கள் அடிக்கட்டையுடன் ராணி சினிமாவில் வந்து பரிசைப் பெற்றுக்கொள்ளவும்.

ஹஜ் வெளியீடு
15-11-78 முதல் S. S. R., வீரப்பா நடித்த சிவகங்கைச் சீமை இது வீரபாண்டிய கட்டப்பொம்மனின் தொடர்ச்சி



கடைசி வாரம் கடைசி 2 தினங்கள்
ராஜா (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-30, 9-45
மரிக்கார் ராமதாஸ்
ஹெலன்குமாரி
மற்றும்பலர் நடித்த சிறந்த ஹாஸ்ய திரைவிருந்து!
ஏமாளிகள்
15-ந் திகதி முதல் பந்தபாசம்



புதிய படத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த ரசிகப் பெருமக்களுக்கு
மனோஹரா தியேட்டர் ஸ்தாபனத்தாரின்
மகிழ்ச்சிகரமான ஹஜ்ஜிப் பெருநாள் வெளியீடு!
மனோஹரா —யாழ்ப்பாணம்
இன்று ஆரம்பம்
தினசரி 4 காட்சிகள்





நவரசத்திலகம் முத்துராமன் கலைச்செல்வி ஜெயலலிதா தங்கவேலு
சுருளிராஜன், சச்சு, ஸ்ரீகாந்த் சுகுமாரி, வி. எஸ். ராகவன்
மற்றும் பலர் நடித்த
கணவன் மனைவி
குடும்பத்திலுள்ளவர்கள் அனைவரும் பார்த்து இன்புற வேண்டிய படம்



REGAL (Jaffna)
NOW SHOWING
Daily at, 4-30, 7-00&9-30 p.m,
Sidne James, Kenneth Williams
in
'CARRY ON MATRON'
(Color)



ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30 & 9-45
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி நடித்த
திருடாதே [புதிய பிரதி]



சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
பேசும் தெய்வம் (புதிய பிரதி)
Showing Soon "Blood Money"



வின்ஸர் [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள் போன்: 466
3-வது ஜனத்திரள் வாரம்
சிவராம் சந்திரகலா தனரத்தினம் நடித்த
அநுராகம்



வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ஜெய்சங்கர், சுஜாதா நடித்த
நீ ஒரு மகராணி
(புதியபிரதி)



லிடோ (யாழ் நகர்)
போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
எங்கள் தங்க ராஜா

# இலங்கைத் தமிழரின் கலை, கலாசாரப் பின்னணியில் புதிய படம்

## இந்திய பட அதிபர் தயாரிக்கிறார்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் முன்னேற்ற ஆர்வமும், செயல்துடிப்புமுள்ள இளைஞர்கள் பலரைக் கண்டேன். இந்த இளைஞர்கள் தொழில் ரீதியாகவும், கலை ரீதியாவும் செயல்பட்டு பெரும் பயன் அடையவேண்டும். அவ்வாறு செயல்படுவோருக்கு எனது உதவிகளையும், ஆதரவுகளையும் வழங்குவேன்.'

இவ்வாறு தமிழகத்திலிருந்து வந்துள்ள படஅதிபர் திருத்துறைப்பூண்டி என். என். கல்யாணசுந்தரம் கூறினார்.

அமிர்தாலயா தமிழ்த் திரைப்பட நிறுவன உரிமையாளரும், 'ஆருத்ரா தரிசனம்' தமிழ்த்திரைப்படத்தைத் தயாரித்து வருபவருமான திரு என் என் கல்யாணசுந்தரம் குறுகிய கால விஜயமொன்றினை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருந்தார் 'ஈழநாடு' காரியாலயத்துக்கு வருகை தந்த அவருடன் உரையாடினோம்.

### பிரமாண்டமான தயாரிப்பு

கொஞ்சும்சலங்கை, தில்லானா மோகனாம்பாள் திரைப்பட வரிசையில் நீண்டகால இடைவெளிக்குப்பின் கர்நாடக இசைக்கு முக்கியத்துவம் கொடுத்து குன்னக்குடி வைத்தியநாதன் இசையமைப்பில் நாமக்கிரிபேட்டை கிருஷ்ணனின் நாதஸ்வரத்துடனும் வலையாட்டி சுப்பிரமணியத்தின் தவிலுடனும், நடிகை சுஜாதா, புதுமுகம் விஜயபாபு ஆகியோர் நடிக்கும் ஆருத்ரா தரிசனம் தமிழ்த் திரைப்படத்தை கலரில் பிரமாண்டமாக தயாரித்து வருகின்றேன். இது அடுத்த ஆண்டு தைமாதத்தில் திரையிடப்படும் என்று அவர் கூறினார்.



'ஆருத்ரா தரிசனம் திரைப்படம் வியட்நாம் வீடு சுந்தரத்தின் கதை, திரைக்கதை-வசனம் டைரக்ஷனில் உருவாக்கப்படுகின்றது வியட்நாம்வீடு சுந்தரத்தின் முழு முயற்சியினையும் குன்னக்குடி வைத்தியநாதனின் இசைத்திறமையிலும் புதிய கதையமைப்பு. கலையம்சங்கள், சிறந்த இசையுடன் 'ஆருத்ரா தரிசனம்' திரைப்படத்தை உருவாக்கி அமரர் சாண்டோ சின்னப்பா தேவரின் வழியில் திரைப்படத் துறையில் முன்னேற முயற்சிக்கின்றேன் என்றார் திரு. கல்யாணசுந்தரம்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

### தேவரின் பாணியில்

திரைப்படத் தயாரிப்பில் இன்று கவர்ச்சியே பெருமிடத்தைப் பிடித்துள்ளது. ஆயினும் தேவரின் பாணியில் துணிவும், புதுமையும் நிறைந்த திரைப்படமாகவே எனது முதல் தயாரிப்பான 'ஆருத்ரா தரிசன'த்தை தயாரிக்கின்றேன் இப்படம் சிதம்பரத்தைப் பின்னணியாகக் கொண்டு உருவாக்கப்படுகின்றது இதன் வெளிப்புறக் காட்சிகள் சிதம்பரத்திலேயே முழுமையாக. அமைகின்றன இப்படத்தில் 7 நிமிட நகளில் பாடப்படும் ''தென்னாடுடைய சிவனே போற்றி'' என்ற பாடல் காட்சியில் இமாலயம் முதல் இராமேஸ்வரம் வரையுள்ள ஆத்மலிங்கங்கள் 108 காண்பிக்கப் படுகின்றன.

### இலங்கையில் தயாரிப்பு

1979ம் ஆண்டு தைமாதம் இலங்கைத் தமிழரின் கலை கலாச்சாரப் பின்னணியில் முழுக்க முழுக்க இலங்கையில் ஒரு தமிழ்த் திரைப் படத்தை எடுக்க திட்டமிட்டே இங்குவந்துள்ளேன். இதற்காகயாழ்ப்பாணத்திலுள்ள நண்பர்களோடும், கொழும்பிலுள்ளசிங்களத் திரைப்பட உலகப் பிரமுகர்களோடும் ஏற்பாடு செய்து அவர்களின் பூரண ஒத்துழைப்பினைப் பெற்றுள்ளேன்.

எனது இலங்கைத் தயாரிப்புத் திரைப்படத்தில் திறமையுள்ள புதிய இலங்கை நடிகர்களை அறிமுகம் செய்து வைக்கவும்; சிறப்பான நடிப்பும் வேடப் பொருத்தமுள்ள நடிகர்களையும் பயன்படுத்திதமிழ்த்திரையுலக நடிகர்களையும் இணைத்து உருவாக்குவதேஎனது திட்டம்.

### நல்லூரில் ஆரம்பமாகும்

எனது இலங்கைத் தயாரிப்பு முழுமையாக இலங்கையில் படமாக்கப்பட்டு இலங்கை, இந்தியா, வேறு பிறநாடுகளிலும் திரையிடுவதே எனது திட்டம். இப்படத்தின்ஆரம்பவிழா நல்லூர் கந்தசாமி கோவிலில் நடைபெறும்.

முருகப்பெருமானின் அற்புதச்சிறப்புகளை கலையம்சத்தோடும், பக்திச்சுவையோடும் நண்பர் திரு. ரங்கநாதன் 'கந்தர் அலங்காரம்' என்னும், திரைப்படமாகத் தயாரித்து வருகின்றார். இதன் இசையமைப்பாளர் குன்னக்குடி வைத்தியநாதன் டைரக்ஷன் வியட்நாம்வீடு சுந்தரம் இவ்விருவரும் தத்தம் துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களே.

''ஈழநாடு'' பத்திரிகை அமைப்பில் சிறிதாயினும் தனக்கென தனித்துவமான வசாகர்களைக்கொண்டு விளங்குவதாகக் கேள்விப்பட்டேன். இத்தகைய ஒரு சிறந்த பத்திரிகையின் மூலமாக இலங்கை ரசிகர்களுடன் தொடர்பு கொள்ள வாய்ப்பளித்தமைக்கும் ஒத்துழைப்பு அளித்தமைக்கும் என்றும் என் நன்றிகள்''

---

### கண்ணதாசன்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தாசன். அதுமட்டுமல்ல, 'நான் சொன்னதையெல்லாம் சரியாக எழுதியிருக்கிறீங்களா...?' என்றும் கேட்டு வைத்தார்!

நான் அடுத்த கேள்விக்குள் நுழைந்தேன்.

'தமிழக முதலமைச்சர் பற்றிய உங்களின் சொந்தக் கருத்து என்ன?'

'அவர் ஆட்சிக்குப் புதியவர்; நிர்வாகத்துக்குப் புதியவர். அதனால், உடனடியாகவே செடி மரமாகி, காய் கனிந்து பழமாகிவிடும் என்று எதிர்பார்க்க முடியாது. 'எம். ஜி. ஆர்.' எனும் மூன்றெழுத்து இன்று தமிழ்நாட்டு மக்கள் மனதில் மட்டுமல்ல, தென்னிந்திய மக்கள் மனதிலும் நிலைபெற்றிருக்கிறது இலேசில், அழித்துவிடமுடியாது' என்று கூறிய கவிஞர்;

'நட்புக்கு இலக்கணம் வகுத்தவர்; நட்புக்கு மிகவும் உண்மையானவர். தமிழக முதலமைச்சரைப் பொறுத்தவரை அவரது தேவை மிக மிகக் குறைவானது. இது இன்றுமட்டுமல்ல; நேற்றும் தான், நாளையும் தான். பொதுச்சொத்துக்கள் மீது அவர் ஆசைப்பட்டதில்லை. இந்த ஆசை வராததினால், பொதுச்சொத்துக்களின் மீது அவர் கைவைக்கவில்லை நாணயமான இவரை 'A Mass Man' என்று கூறலாம். இந்தப் பெரிய 'மக்கள் மனிதனு'க்குக் கெட்ட பெயரே கிடையாது...!' என்றார்'

கவிஞர் வேறு திசைக்கு என்னைத் திருப்பினார்.

'உங்கள் நாட்டில் புதிய ஆட்சி-புதிய அரசியலமைப்பு வந்திருக்கிறது. தமிழர்கள் எப்படி இருக்கின்றார்கள்?'

நான் விபரமாகக் கூறினேன். எல்லாவற்றையும் பற்றி ஏற்கனவே விபரமாகத் தெரிந்தவராக கவிஞர்—

'இலங்கை மக்கள் மீது எனக்கு எப்பொழுதுமே ஒரு தனி மதிப்பு உண்டு. இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் மீது மிகுந்த பற்றுள்ளவன் நான்" என்று கூறிவிட்டு,

''தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு அரசுடன் இணைந்து, உதவிகளைப் பரவலாகப் பெற்று தங்கள் பகுதிகளை வளமாக்கிக்கொள்ள தமிழ்த் தலைவர்கள் முதலில் முன்வர வேண்டும். பிரதேசரீதியாகவோ வம்சவழி ரீதியாகவோ இலங்கைவாழ் தமிழ் மக்களிடையே பிரிவினை வராமல்; ஒற்றுமையுடன் ஐக்கியப்பட்டு, இப்போதுள்ள அரசுடன் ஏதோ ஒரு அடிப்படையில் ஒற்றுமைகண்டு தங்களை உயர்த்திக் கொள்வதே நல்லது. இதுபற்றி இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும்'' என்றார் கவிஞர்.

''இலங்கை வரும் நோக்கம் உண்டா?''

''எனது ஆத்ம நண்பர் மட்டக்களப்பு எம். பி, செ இராசதுரை அழைப்பின்மீது 1955-ல் முதற் தடவையாக நான் மட்டக்களப்பு சென்றேன். மலையகத்தலைவர் திரு. எஸ். தொண்டமான் அழைத்து 1965ல் நுவரெலியா சென்றேன். இதில் என்ன விசேஷம் தெரியுமா? கொழும்பு சென்ற இரண்டு சந்தர்ப்பங்களிலும் எனக்கு கொழும்பில் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்க வில்லை. வசதியும் வாய்ப்பும் கிடைத்தால் மீண்டும் இலங்கை வருவேன்'' என்று இச் சந்திப்பை முடித்துக் கொண்டார் ஆஸ்தான கவிஞர் கண்ணதாசன்.

---

### அமிர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரமுகர்களும், மற்றும் பிரமுகர்களும் வரவேற்பர்.

இன்று மாலை கொழும்பில் நடைபெறும் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்றக் கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் கலந்துகொள்வார். இக் கூட்டத்தில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என எதிர்பார்க்கட்படுகிறது.

(கெ-இ)

### எளிமையான...

[5-ம் பக்கத் தொடர்ச்சி)

பாலங்களும் அவரையேஅவதானித்தேன். ரஜனியுடைய ஒவ்வொரு அசைவுமே ஒருஸ்டைலாகத்தான் இருந்தது. இப்போதுள்ள இளையதலைமுறை நடிகர்களில் ரஜனி நிச்சயம் வித்தியாசமானவர்தான். என்பது சந்தேகமில்லை.

(அடுத்தவாரம்)

### வேலை வாய்ப்புகளை

(2-ம் பக்கத் தொடர்ச்சி]

றிய தகவலோ, விஞ்ஞான ரீதியான மீன்பிடிக் கருவிகளின் பயன்பாடுகளோ அறியாதவர்களாக உள்ளனர்.

உதாரணத்துக்கு எமது சீ-நோர் நிறுவனம் இலாபம் கருதாது மீன்பிடித்தொழிலின் விருத்திக்குச் சேவை செய்யும் நிறுவனமாகும். இதன் உற்பத்திப் பொருள்கள் குறைந்த விலையில் மீனவர்களுக்கு விற்பனைசெய்யப்படுகின்றது. இதற்காக விற்பனை பிரதிநிதிகளையும் வைத்திருக்கின்றோம். பத்திரிகை விளம்பரம், வேறுவகையான கருவிகளின் விளம்பரங்களை மீனவர்கள் அறிய முடியவில்லை.

இன்று இலங்கையில் மீன்பிடி பற்றிச் சில கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. முழுமையான நூல்கள் இல்லை. புதிய முறைகளைப் பற்றிய விபரங்களைப் பத்திரிகைகள் கூட வெளியிடுவதில்லை. சாதாரண மக்கள் தம் வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டுள்ள மீன்பிடித் தொழிலைஅந்தச் சாதாரண மக்கள் அறியும் வாய்ப்பில்லையேல் எவ்வாறு மீன்பிடித்தொழிலை, விருத்தி செய்யமுடியும்? விருத்தி. அபிவிருத்தி என்பது வாய்ப்பேச்சால் ஏற்படுவதல்ல. செயல்முறையினால் ஏற்படுவதாகும் என்று கூறிப் பேட்டியை முடித்துக்கொண்டார்.

### இன்று

லண்டன் முரசு சிறப்பாசிரியர் திரு. க. ஞானசூரியனின் 'அஞ்சா நெஞ்சம்' நூல் வெளியீட்டு விழா இன்று மாலை கைதடி இலங்கை சைவ அநாதைகள் இல்லத்தில் நடைபெறுகின்றது!

### பனம்...

[4ம் பக்கத் தொடர்ச்சி]

மாவட்ட எம். பி.க்கள், அமைச்சர் திறப்புவிழாவிலிருந்து வரும்வரை காத்திருக்க வேண்டியேற்பட்டது.

திரு. கே. சி நித்தியானந்தா தலைமையில் வீடமைப்பு திணைக்கள முன்றலில் நடந்த கூட்டத்தில் அமைச்சர் மேலும் கூறியதாவது: தமிழில் பேசமுடியாமைக்கு வருந்துகிறேன் எனக்களித்த வரவேற்புக்கு என் நன்றி. அரசு பதவி ஏற்றபின் முதல் தடவையாக உத்தியோக பூர்வ விஜயத்தை இன்று மேற்கொண்டுள்ளேன் நான் உங்களுக்கு புதியவனல்ல 1955-ம் ஆண்டு சேர் கந்தையா வைத்தியநாதனுடன் நிதி அமைச்சர் என்ற முறையில் வந்திருக்கிறேன். அச்சமயம் பருத்தித்துறையில் மருத்துவ நிலையத்தையும் திறந்து வைத்திருக்கிறேன் பெருந்தோட்டக்கைத்தொழில்அமைச்சர் என்ற முறையில் இவ்விழாவில் பங்குபற்றுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

சிலமாதங்களுக்கு முன் எனது அமைச்சுக்கு யாழ்ப்பாணத்தைப் பொறுத்ததை எவ்வித வேலையும் இருக்கவில்லை ஒரு சில தென்னைகளைத் தவிர வேறு எந்தத் தொடர்பும் இல்லை. எனது அமைச்சு முக்கியமாக தெங்கு பொருள் சம்பந்தமானது. இதுவெளிநாட்டுச் செலாவணியை தேடித் தந்தது. தேங்காய் இப்பகுதியில் குறைவாக உள்ளதால், விலை ஏற்றம் ஏற்பட்டது எனது அரசு தேங்காய் உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுத்து வருகிறது- (க)

### வடபகுதி..:

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேசுகையில், கடந்த காலத்தில் பனம் பொருள் அபிவிருத்திச்சபை நிறுவுமாறு பல தடவைகள் நாங்கள் கேட்டதாகவும் தற்போது அது நிறைவேறியதையிட்டு தாம் மகிழ்ச்சியடைவதாகவும் தெரிவித்தார். (க.இ)


## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி பரமேஸ்வரன்

கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளர் திரு. கந்தையா பரமேஸ்வரனின் அன்பு மனைவி மகேஸ்வரி (விரிவுரையாளர், கொக்குவில் தொழில் நுட்பக்கல்லூரி) காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற திரு. தம்பிப்பிள்ளை, திருமதி தம்பிப்பிள்ளை ஆகியோரின் ஏக புத்திரியும், சுன்னாகம் வழக்கறிஞர் திரு. த. தம்பிரத்தினம் J. P., U· M., கலாநிதி தம்பிநாயகம்(மலேசியா ஆகியோரின் சகோதரியுமாவார். ஈமச்கிரியைகள் (இன்று) 12-11-78 ஞாயிறு நண்பகல் 12 மணிக்கு சுன்னாகம் புகையிரத நிலைய வீதியில் உள்ள ''முதலியார்'' வளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்-

0774



## மரண அறிவித்தல்

### நல்லதம்பி சண்முகநாதன்

திருகோணமலை கடற்படை கணக்காளர் கந்தோரில் கடமையாற்றிய ந சண்முகநாதன் காலமாகிவிட்டார் இவர் திருநெல்வேலி நல்லதம்பி நல்லம்மா ஆகியோரின் அன்பு மகனும், வனஜமலரின் அன்புக்கணவரும், பிரமிளா, சகிலா, சகிலா ஆகியோரின் அன்புத்தந்தையும், மகாலிங்கம் (மகான்), காலஞ்சென்ற ரட்னம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், உருப்பராய் தெற்கு திரு. திருமதி குமாரசுவாமியின் அன்புமருமகனுமாவார் அன்னாரின் பூதவுடல் 9ஜி1, சிவன்கோவில் வீதி, திருநெல்வேலி இல்லத்திலிருந்து இன்று (12-11-78) காலை 10 மணிக்கு கொக்குவில் கணக்கமரத்தடி இந்து மயானத்திற்கு ஈமச்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். உறவினர்களும், நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

0778


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978ம் ஆண்டு நவம்பர் மாதம் 12ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, Telephone: 889, Registered as a Newspaper in SriLanka.